Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 55 | புதன்கிழமை | தை 7 ஆம் நாள் 20 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## பைடன் இன்று பதவியேற்பு!

வொஷிங்டன், ஜன. 20

அமெரிக்க ஜனாதிபதியாக இன்று பதவியேற்கவுள்ளார் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரான ஜோ பைடன். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த நவம்பர்

19 ➤

## மீண்டும் மழை!

யாழ்ப்பாணம், ஜன. 20

இலங்கைக்கு தெற்கே காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகியுள்ளமையால் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் நாளையும், நாளை மறுதினமும் மிதமான

19 ➤

# இராணுவமயமாக மாறும் இலங்கை!

## உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் கடும் கண்டனம்

கொழும்பு, ஜன. 20

இலங்கையில் முன்னொருபோதும் இல்லாத அரச இயந்திர இராணுவ மயமாக்கல் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியில் இடம்பெறுகின்றது. இதனால் இலங்கையில் ஜனநாயகம் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் மற்றும் ஜனநாயகத்துக்கான இலங்கைப் பத்திரிகையாளர்கள் அமைப்பு ஆகியன கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

19 ➤

# பொலிஸாரின் வன்மமே உதயன் மீதான வழக்கு!

## நீதிமன்றில் 'புட்டுப்புட்டு'வைத்தார் சட்டத்தரணி திருக்குமரன்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணப் பொலிஸார் தாம் விசுவாசம் வைத்திருப்பவர்களை திருப்திப்படுத்தவே, வன்மத்துடன் உதயன் பத்திரிகை மீது பொய்யான தகவல்களை வழங்கி, நீதிமன்றை தவறாக வழிநடத்தும் நோக்குடன் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில், 'உதயன் பத்திரிகை' சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.திருக்குமரன் உண்மைகளை ஒவ்வொன்றாகப் புட்டுப்புட்டு வைத்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம்

19 ➤

உதயன் வழக்கில் நேற்று முன்னிலையான சட்டத்தரணிகள்



வி.திருக்குமரன் | ம.டெனிசியஸ் | தி.கணாதீபன் | த.திவாகர் | எஸ்.ரிசிகேசன் | பு.அபிதன்

## காணி சுவீகரிப்புக்கு எதிராக வேலணையில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 20

பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், காணிசுவீகரிப்புகளை நிறுத்தக் கோரியும், வேலணை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் வேலணை பிரதேச செயலர் பிரிவு

19 ➤

## வடக்கில் நேற்றும் 52 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜன. 20

வடக்கில் நேற்று 52 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். வவுனியாவைச் சேர்ந்த 45 பேருக்கும், யாழ்ப்பா

19 ➤

## யாழ்ப்பாணத்தின் தீவுகள் சீனாவுக்கு தாரை வார்ப்பு

கொழும்பு, ஜன. 20

நயினாதீவு, நெடுந்தீவு, அனலை தீவு ஆகிய பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பை உருவாக்குவதற்கு சீனாவுக்கு அனுமதி

19 ➤

## கொரோனா தொற்றால் மன்னாரில் முதல் இறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

மன்னார் பொது மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் உயிரிழந்த ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்

19 ➤

## முள்ளிவாய்க்கால் தூபிக்கு நிதி வழங்கக் கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் மீண்டும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி

19 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் டிக்க் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

அதிசிறந்த
anytime data
பக்கேஜ்கள் 4G போனஸ் சகிதம்



ரூபா. 49 750 MB
ரூபா. 99 1.5 GB
ரூபா. 199 3.3 GB
4G
செயற்படுத்துவதற்கு #170# ஐ டயல் செய்யுங்கள் அல்லது Datamart App ஐ உபயோகியுங்கள்.
SLTMOBITEL

# அயல் நாடுகளுக்கே முன்னுரிமை; கோத்தாவுக்கு மோடி உறுதியளிப்பு



**கொழும்பு, ஜன.20**

**அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற தனது கொள்கைக்கு தொடர்ந்தும் முக்கியத்துவம் வழங்கப்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை ஜனாதிபதிக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளார். இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ருவிற்றர் பதிவுக்கான பதில் பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

கொரோனாத் தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளமைக்காகவும், நட்புறவு அயல்நாடுகள் தொடர்பான தாராள மனப்பான்மைக்காகவும் ஜனாதிபதி கோத்தாபய இந்தியப் பிரதமருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். அதற்கு நன்றி தெரிவித்துள்ள மோடி, நோய் பரவலுக்கு எதிராக கூட்டாக போராடும். அதேவேளை, நாங்கள் தொடர்ந்தும் அயல் நாடுகளுக்கு முன்னுரிமை என்ற எங்கள் கொள்கைக்கு முக்கியத்துவம் வழங்குவோம் - எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## சிறுவன் துஷ்பிரயோகம்; மூவர் கைது

கொழும்பு, ஜன.20

8 வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனபேருவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் தொல்லையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவன் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## வலம்புரி சங்கை விற்க முயன்ற 6 பேர் கைது

கொழும்பு, ஜன.20

வலம்புரி சங்கு ஒன்றை சட்டவிரோதமாக 20 மில்லியன் ரூபாக்கு விற்பனை செய்ய முயற்சித்த 6 பேர் அம்பலாந்தோட்டையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். (ச-இ)

## கொரோனாப் பான விளம்பரம் இரத்து



கேகாலை, ஜன.20

கேகாலை மருத்துவரென அழைக்க படுகின்ற தம்மிக்க பண்டாரவால் கண்டுபிடிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட கொரோனாப் பானத்துக்கான விளம்பரம், இணையத்தள விற்பனைப் பக்கமான ஈபை (EBAY) யிலிருந்து அதற்கான விளம்பரம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னதாக இந்தக் கொரோனாப் பானம் சார்ந்த விளம்பரம் இந்தப் பக்கத்தில் விளம்பரம் செய்யப்பட்டது. இலங்கை ரூபாவுக்கு அமைய சுமார் 75 ஆயிரம் ரூபா வரை அந்தப் பானம் விற்பனை செய்யப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டது. எனினும் எந்தக் காரணத்தையும் குறிப்பிடாது இந்த நிறுவனம் குறித்த விளம்பரத்தை நீக்கியுள்ளது. (ற-இ)

## கொரோனா எதிர்ப்பு சக்தி; 10 பானங்களுக்கு அனுமதி

கொழும்பு, ஜன.20

கொரோனா வைரஸ் நோய்க்கு எதிர்ப்புச் சக்தியை வழங்குகின்றன எனக் கூறப்படும் 10 புதிய ஔடதங்களுக்கு ஆயுள்வேத திணைக்களத்தின் விடயத்துக்கு பொறுப்பான குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. நோய் எதிர்ப்பு பானம் என்ற ரீதியில் இவை அனுமதிக்கப்பட்டுள்ளன என ஆயுள்வேத திணைக்களத்தின் ஆணையாளர் சத்துர குமார துங்க தெரிவித்துள்ளார். இதனூடாக கொரோனாத் தொற்றுக்கான விசேட நோய் எதிர்ப்புச் சக்தி உடலில் ஏற்படுகின்றதா என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. புதிய 30 ஔடதங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கேகாலை தம்மிக்க பண்டாரவால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுள்வேத ஔடதமும், விடயத்துக்கு பொறுப்பான குழுவின் அனுமதியின் பின்னர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அனுராதபுரத்தில் அமைந்துள்ள மருத்துவமனை ஒன்றில் இந்தப் பரிசோதனை முன்னெடுக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## தப்பி ஓடிய பெண் மடக்கிப்பிடிப்பு

வெல்லவாய, ஜன.20

வெல்லவாய பொது வைத்தியசாலையின் கொரோனா நோயாளர்கள் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் நேற்றுக் காலை விடுதியில் இருந்து தப்பிச் சென்றிருந்தார்.

கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் அந்தப் பெண், வைத்தியசாலையில்கொரோனா நோயாளர்கள் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டு பி.சி.ஆர் சோதனைகள் பெறும்வரை அங்கேயே தங்க வைக்கப்பட்டிருந்தார். முடிவுகளைப் பெறுவதற்கு முன்னர் அந்தப் பெண் விடுதியில் இருந்து தப்பி ஓடிவிட்டார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதனையடுத்து மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் அந்தப் பெண்ணைத் தேடிப் பிடித்து அருகிலுள்ள மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## பயிர்ச்செய்கை காணிகள் விவசாயிகளுக்கு கையளிப்பு

கொழும்பு, ஜன.20

வனஜீவராசிகள்திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றுக்கு உள்பட்ட, நீண்டகால பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் காணிகளை விவசாயிகளிடம் கையளிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமது பயிர்ச்செய்கை காணிகள், வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களங்களுக்கு உள்பட்டவையாகக் காணப்படுவதால் நீண்டகாலமாக நாம் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம் என விவசாயிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தனர். இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினருடன், நில அளவைத் திணைக்களமும் இணைந்து பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைய, திணைக்களங்களின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படக்கூடிய பயிர்ச்செய்கை நிலங்களை விவசாயிகளிடம் கையளிப்பதற்கான நடவடிக்கை நடைபெற்றுவரும் ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார். (ந-இ)



## தமிழின அழிப்புக்கு நீதி கோரி டென்மார்க்கில் வாகன பேரணி

கோபன்ஹேகன், ஜன.20

ஈழத்தமிழின அழிப்புக்கு நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று டென்மார்க் வாழ் தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. டென்மார்க் தலைநகரில் ஆரம்பமான கவனவீர்ப்பு வாகனப் பேரணி டென்மார்க் நாடாளுமன்ற முன்றலை சென்றடைந்தது. பின்பு நாடாளுமன்ற முன்றலில் கூடிய மக்கள், ஈழவிடுதலைப் போரிலே வீரச்சாவடைந்த மாவீரர்கள் மற்றும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் கொல்லப்பட்ட பொதுமக்களை நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தினர். கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்ற இந்தப் பேரணியில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் படங்கள், தேசியக் கொடி மற்றும் தமிழினப்படுகொலை தொடர்பான பதாகைகள் என்பவற்றையும் பேரணியில் கலந்துகொண்டவர்கள் ஏந்திச் சென்றனர். பேரணியின் இறுதியில் தமிழினப் படுகொலைக்கான ஆதாரங்கள் அடங்கிய மகஜர் ஒன்றும் டென்மார்க் வெளிநாட்டமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-இ)

## கிராம மட்டத்தில் மின் உற்பத்தி நிலையங்கள்

கொழும்பு, ஜன.20

கிராம மட்டத்தில் சிறியளவில் 7 ஆயிரம் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கு இலங்கை மின்சார சபை திட்டமிட்டுள்ளது.

4 வருடங்களுக்குள் இந்தச் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ முடியும். இதனூடாக 100 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் தலைவர், பொறியியலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ந-இ)

# மன்னார் மாவட்ட வாக்காளர் இடாப்பிலிருந்து 7ஆயிரத்து 727 வாக்காளர்கள் நீக்கம்

*மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ரிசாத் எம்.பி முறைப்பாடு*



**மன்னார், ஜன.20**

**மன்னார் மாவட்ட வாக்காளர் இடாப்பிலிருந்து 7ஆயிரத்து 727 வாக்காளர்கள் நீக்கப்பட்டமை தொடர்பில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார்.**

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து, புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வந்தவர்கள், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், கொத்தணி வாக்களிப்பு முறை ஊடாக, தமது மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட அதிகமானவர்களின் வாக்காளர்பதிவை, மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளரும், அதிகாரிகளும் சேர்ந்து திட்டமிட்டு, வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கி யுள்ளனர்.

எனவே, அவர்களது வாக்குகளை மீள அந்தந்த கிராமங்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த வாக்காளர்கள் அனைவரும் மீள் குடியேற்றத்துக்காக சொந்த மண்ணுக்குச் சென்று, தமது பூர்வீகப் பிரதேசங்களில் தங்களுக்கான கொட்டில்களையோ அல்லது தற்காலிக இருப்பிடங்களை அமைத்த பிறகு, அங்கு கல்வி, சுகாதார ,வர்த்தக நடவடிக்கைகளில் குறைபாடு இருந்ததால், அல்லது இருப்பதற்கு ஒழுங்கான வீடுகள் இல்லாத காரணத்தால், மீள் குடியேறிய இடங்களிலிருந்து தற்காலிகமாக மீண்டும் புத்தளத்துக்கு வந்திருக்கின்றனர். இவர்கள், மீள்குடியேறிய பிரதேசங்களில் உரிய வசதிகள் கிடைத்தவுடன் மீண்டும் அங்கு செல்வதற்கு விருப்பத்துடன் இருக்கின்றனர். அவ்வாறு ஆர்வத்துடன் இருக்கின்றவர்களின் வாக்குப் பதிவுகளை பலவந்தமாக நீக்கியமை மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறலாகும். எனவே, மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரால் வாக்களிப்பதற்கு தடுக்கப்பட்ட 7 ஆயிரத்து 727 வாக்காளர்களையும், அவர்களது சொந்த மாவட்டமான மன்னார் மாவட்ட வாக்காளர் இடாப்பில் மீளப் பதிவு செய்து, அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டும் என்றுள்ளது. (ப-56)

# கிழக்கு முனையத்தின் 49 வீதம் இந்தியாவிடம்

*ஜே.வி.பி தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.20

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் 49 வீத பங்குகளை இந்தியாவுக்கு வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மா னித்துள்ளது என ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்ட பின்னர் தனக்கு ஏதாவது தரவேண்டுமென இந்தியா கோரியது.

இதற்கு அடிபணிந்து கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அரசு வழங்கியுள்ளது. ஆனால் இதன் மூலம் இலங்கைக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# காயங்களுடன் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜன.20

வவுனியா, தரணிக்குளத்தில் தலையில் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். விபத்தாலேயே அவர் உயிரிழந்தார் என்று விசாரணைகளில் தெரியந்துள்ளது.

நேற்று அதிகாலை ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த மக்கள் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த ஆ.யேசுதாசன் என்னும் 3 பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஈச்சங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (மஎ-110)

# சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 20

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை கிராம அலுவலர் பிரிவில் ஒருவர் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு, கோம்பாவிலைச் சேர்ந்த வீரப்பன் அங்கப்பன் (வயது63) என்பவரே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் முதல் வீடு திரும்பாத நிலையில் அவர்களை உறவினர்கள் தேடியுள்ளனர். இரணைப்பாலையில் உள்ள பற்றைக்காடான பகுதியில் நேற்றுக்காலை அவருடைய உடல் மீட்கப்பட்டுள்ளது. (எ-115)

# பொறுப்பற்று செயற்பட்டால் புறக்கணிக்கப்படுவீர்கள்!!

*அரசை எச்சரிக்கிறார் ஓமல்பே சோபித தேரர்*



கொழும்பு. ஜன.20

கொழும்பு துறை முகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். கடந்த அரசாங்கம் செயற்பட்ட விதத்தில் செயற்பட்டால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் புறக்க ணிப்பார்கள் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

மேலும், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் பொருளாதாரத்தின் கேந்திர மையம் மாத்திரமல்ல, தேசிய பாதுகாப்புக்கான பிரதான தளமாகவும் உள்ளது. அரசாங்கம் பொருளாதாரத்தைமேம்படுத்துவதாக குறிப்பிட்டுக்கொண்டு, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்டுத்தும் வகையில் செயற்படுகிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கும் விடயம் குறித்து ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் மாத்திரம் சாதகமாக கருத்துரைக்கிறார்கள்.

தொழிற்சங்கத்தினர், துறைசார் நிபுணர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இந்த எதிர்ப்புக்களை அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பாக அரசாங்கம் மாற்றியமைக்கக்கூடாது. ஆகவே அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும், என்று தெரிவித்தார். (நு-இ)

# சட்டத்தரணிகளை பொலிஸுக்கு இணைப்பது தொடர்பில் தெரியாது

*கைவிரித்தார் நீதி அமைச்சர்*

கொழும்பு, ஜன. 20

சட்டத்தரணிகள் 150 பேரை பொலிஸ் பரிசோதகர்களாக நான் இணைத்துக் கொள்ளப் போகின்றேன் என தெரிவிக்கப்படும் செய்திக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

சட்டத்தரணிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளும் அதிகாரமும் எனக்கு இல்லை என்று நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் புத்திக்க பத்திரண, சட்டத்தரணிகள் 150 பேர் பொலிஸ் பரிசோதகர்களாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மொழி அடிப்படையில் இணைத்துக்கொள்ளும்போது சிங்கள பிரதேசங்களுக்கு சிங்கள மொழி தெரிந்தவர்களும், சிறுபான்மை மக்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு தமிழ் மொழி தெரிந்தவர்களும் இணைத்துக்கொள்ளும் நிலைமை ஏற்படும் என்றே நினைக்கிறேன்.

ஆனால் அனைத்துப் பிரதேசங்களுக்கும் தமிழ், சிங்கள மொழியில் திறமையானவர்களை நியமிப்பதே நல்லது. அத்துடன் பொலிஸ் திணைக்களத்துக்கு சட்டத்தரணிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையில் நீதித்துறைக்கு எவ்வாறான அதிகாரம் இருக்கின்றது என்று கேள்ளி எழுப்பப்பட்டது.

இது தொடர்பாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தாவது, சட்டத்தரணிகளை பொலிஸ் திணைக்களத்துக்கு இணைத்துக்கொள்ளும் திட்டத்துக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை: பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளின் போது சட்டத்தரணிகளின் சேவையைப் பெற்றுக் கொண்டால் பொது மக்களுக்கு இலகுவில் அவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற யோசனையையே நான் முன்வைத்தேன்.

மாறாக அவ்வாறு இணைத்துக் கொள்ளும் எந்த அதிகாரமும் எனக்கு இல்லை. நான் தெரிவிக்காத ஒருவிடயத்தை சிலர் தெரிவித்து, அதனை அடிப்படையாகக் கொண்டு எம்மை விமர்சிக்கின்றனர்.

சட்டத்தரணிகளை பொலிஸுக்கு இணைத்துக்கொள்வதாக இருந்தால், பொலிஸுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சாலே அதனை மேற்கொள்ள வேண்டும்.

சட்டத்தரணிகளை பொலிஸுக்கு இணைத்துக் கொள்ளப்போகிறேன் எனத் தெரிவிக்கப்படும் விடயத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, என்றார். (ஒ-இ)

# கரும்புத் தோட்ட காணி தொடர்பில் ஒருங்கிணைப்பு குழுவிலேயே முடிவு

## கிளி.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜன.20**

**கரும்புத் தோட்டக் காணி தொடர்பில் எடுக்கப்படும் முடிவுகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்தப்படும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குள் வருகின்ற ஸ்கந்தபுரம் கிராமத்தில் அமைந்துள்ள கரும்புத் தோட்டக் காணியை அமைப்புகளின் பெயரில் அபகரித்து பகிர்ந்துகொள்ள சில அரசியல் தரப்புக்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்று அக்கராயன் பிரதேச பொது மக்களும், பொது அமைப்புகளும் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

குறித்த காணி, கூட்டுறவு அமைப்புகளின் பெயரில் பெறப்பட்டு, முறைகேடான வகையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. அதற்கான பட்டியல்கள் முன்னாள் போராளிகள் மற்றும் காணியற்றவர்கள் என்ற போர்வையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை குறித்த ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்டுள்ளனர் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, கிளிநொச்சி கரும்புத் தோட்டக் காணி தொடர்பில் அரச அதிகாரிகள் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலருடன் தொடர்புகொண்டபோது;

கரும்புத்தோட்டக் காணி தொடர்பில் இதுவரை தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் தற்போது கரும்புத் தோட்டக்காணி தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது. எனவே எதிர்காலத்தில் குறித்த காணியை என்ன செய்வது, யாருக்கு வழங்குவது போன்ற விடயங்கள் தீர்மானிக்கப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்தப்படும்- என்றார். (ப-ரி2)





# மாணவர்கள் கௌரவிப்பு


கிளிநொச்சி,ஜன.20

கிளிநொச்சி, புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலையில் கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

உருத்திரபுரம் உதவும் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் பரீட்சையில் சித்திபெற்ற அனைத்து மாணவர்களும் கௌரவிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-222)



பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பொலிஸ் பரிசோதனை நிகழ்வு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிங்ஸ்லி கேரத் தலைமையில், தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பொலிஸ் அத்தியட்சகர் ஜெ.எஸ்.விஜயசேகர கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டார். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நிகழ்வு நடைபெற்றது. (ற-113)



# புதிய பணிப்பாளராக நிலந்த பிரேமரத்ன!

கொழும்பு, ஜன.20

ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவ தலைமையக ஊடகப் பணியகத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்ட இராணுவ பீரங்கி படையணியின் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்தப் பணியகத்தின் பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்கவுக்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 55 ஆவது படைப்பிரிவின் 551 ஆவது பிரிகேட்டின் தளபதியாக சேவையாற்றிய பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தற்போது இராணுவ ஊடகப் பணியகத்தின் பணிப்பாளராக கடமை ஏற்றுள்ளார். (ற-இ)

# பதில் கடமைக்கு விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம். ஜன. 20

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் வெற்றிடங்களாக உள்ள நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர் பதவிகளுக்கு, பதில் கடமை அடிப்படையில் நியமனம் கோருவதற்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 1 அலுவலர்களிடமிருந்து வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகத்தால், விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த பதவிகளில் தற்போது கடமையாற்றுபவர்களும் கூட இதற்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# சேமக்காலை அமைப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கோம்

## மருதடி விநாயகர் ச.ச.நிலையம் தெரிவிப்பு

மானிப்பாய், ஜன.20

மானிப்பாய் பிப்பிலி இந்து மயானப் பிரதேசத்துக்குள் கிறிஸ்தவ சேமக்காலை அமைப்பதற்கான யோசனை இருப்பின் அதனை மானிப்பாய் பிரதேச சபை நிர்வாகம் தவிர்ப்பது பொருத்தமானது என மானிப்பாய் மருதடி விநாயகர் சன சமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்கள் வெளி தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;


கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த பிரதேச சபை நிர்வாகமும் இவ்வாறான செயலில் ஈடுபட்டது.

மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து அந்தத் திட்டம் முற்று முழுதாக கைவிடப்பட்டிருந்தது.

தற்போது வீதியின் இரு மருங்கிலும் இந்து கிறிஸ்தவ மயானங்கள் இயங்கி வருகின்றன. இந்த மயானங்கள் மக்களுக்குப் பெரும் இடையூறாக உள்ளன.

திண்மக் கழிவுகள், இறந்த மிருகங்களின் கழிவுகள், மித மிஞ்சிய கழிவுகள் என்பவை பிப்பிலி இந்து மயான எல்லைகளில் வகை தொகையின்றி இரவு பகலாகக் கொட்டப்படுகின்றன.

மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மானிப்பாய் பிரதேச சபை மக்களின் ஒப்புதலின்றி, இந்தச் சிறிய மயான எல்லைக்குள் மேலுமொரு சேமக்காலையை அமைக் கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. அப்படி ஒரு திட்டம் இருந்தால், பிரதேச சபை அதனை கைவிடுவது பொருத்தமாகும் என்றுள்ளது. (ப-50)



முல்லைத்தீவுப் பங்கின் புதிய பங்குத் தந்தையாக அருட்திரு அகஸ்டின் அடிகளார் கடந்த ஞாயிறுக்கிழமை பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். முல்லைத்தீவு புனித பேதுரு ஆலயத்தில் முல்லைத்தீவு மறைக்கோட்ட புதிய குரு முதல்வர் அருட்திரு அன்ரனிப்பிள்ளை முன்னிலையில் திருப்பலி நிகழ்வு இடம்பெற்றது. (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சர்வமும் படைமயம்?

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இராணுவப் பயிற்சி கட்டாயமாக்கப்படும் அபாய நிலை தோன்றியுள்ளது. "இராணுவப் பயிற்சிகள் மூலம் நாட்டுப்பற்றுள்ள, ஒழுக்கம் மிக்கதான சமூகத்தை உருவாக்க முடியும். சில நாடுகளில் இந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன" என்று அரச தரப்பால் இந்த பேராபத்தான திட்டத்துக்குச் சப்பைக்கட்டும்; கட்டப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில நாள்களிலேயே இந்த நாடு இராணுவ மயமாக்கலைச் சந்திக்கப்போகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல தரப்புக்களும் மாறிமாறி கூக்குரல் எழுப்பி வருகின்றன. அரச நிர்வாகத்துக்குள் இராணுவ முன்னாள் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றமை, சிவில் கட்டமைப்புக்கள் இராணுவ மயமாகின்றமை என 'சர்வமும் இராணுவம்' என்ற தொனிப்பொருள் பலப்படுத்தப்பட்டு வருகின்ற வேளையில் அதைநோக்கிய பெரும் பாய்ச்சலாகத்தான் இந்த கட்டாய இராணுவப் பயிற்சியை நோக்கமுடியும்.

தனக்கென ஒரு வலுவான - திட்டமிட்ட - பிரத்தியேகமான இராணுவக் கட்டமைப்பைக் கொண்டிராத நாடுகள், ஆயுத ரீதியிலான தயார்ப்படுத்தலுக்காக இந்தக் கட்டாய இராணுவப் பயிற்சியை வழங்குகின்றமை இதுவரையிலான நடைமுறை. இந்தக் கட்டாய இராணுவப் பயிற்சியின் மூலம் சுழற்சி முறையிலான இராணுவக் கட்டமைப்பை அவை வலுப்படுத்துகின்றன. அத்தோடு அந்த நாடுகள் அமைதிக்கும், சுமுகமான வாழ்வியலுக்கும் பெயர் போனவை. உதாரணமாக சுவிஸ், நோர்வே போன்றவற்றைச் சொல்லலாம்,. ஆனால், இலங்கையின் நிலைமை அவ்வாறல்ல. இலங்கையில் இராணுவக் கட்டமைப்பு வலுவாகவும், நிரந்தரமாகவும் உள்ளது. ஒவ்வொரு வருடமும் பட்ஜெட்டில் அதிகளவு தொகை ஒதுக்கப்படும் துறையாகவும் பாதுகாப்புக் கட்டமைப்பே விளங்குகின்றது. ஒவ்வொரு வருடமும் இலங்கையில் இராணுவத்தின் வலுவும், ஆளணியும் அதிகரித்தபடியே இருக்கும் சூழலில், அரச தரப்பினரின் 'கட்டாய இராணுவப் பயிற்சி' என்ற இந்தத் திட்டம் மிகப்பெரும் எதிர்மறை எண்ணமே தவிர வேறொன்றுமில்லை.


பலஸ்தீனத்தை ஆக்கிரமித்து ஒருநாடாக தன்னை நிலை நிறுத்தியுள்ள இஸ்ரேலில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சி என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2035ஆம் ஆண்டுக்குள் இஸ்ரேல் என்றதொரு நாட்டை இல்லாமல் செய்யவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி கங்கணம் கட்டியுள்ள ஈரான் மற்றும் துருக்கி, சிரியா போன்ற மத்திய கிழக்கின் பெரும் எதிரிகளுக்கு மத்தியில் நாட்டின் அனைத்து மக்களும் போராளிகளாக இருந்தால் மட்டுமே தன் நாட்டுக்கு இருப்பு என்பது உள்ளது என்ற அடிப்படையில் இஸ்ரேலில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஒருவகையில் அது ஏற்கக்கூடியதும்தான். ஆனால், இலங்கைக்கு இந்தத் திட்டத்தின் அவசியம் ஏன் என்பதை அரச தரப்பினர் தெட்டத்தெளிவாகப் புரியவைக்க வேண்டும்.

இராணுவப் பயிற்சியின்போது ஆயுதக் கையாள்கை தொடர்பிலும் பயிற்றுவிக்கப்படலாம். இது நாட்டுக்குள் பல சட்டவிரோத ஆயுதக்குழுக்கள் மற்றும் கிளர்ச்சிக் குழுக்கள் என்பனவும் தோற்றம்பெறக் காரணமாகி விடலாம். இந்தப் பேராபத்தைத் தவிர்ப்பதற்காக சிலவேளைகளில் ஓர் இனத்துக்கு மட்டும் இராணுவப் பயிற்சியும் வழங்கப்படலாம். அது எல்லாவற்றையும் விட மேலான பேராபத்தாக வந்துமுடியும். ஆக, எவ்வாறு பார்த்தாலும் 'கட்டாய இராணுவப் பயிற்சி' என்பது இலங்கைக்குத் தேவையற்றதொன்று.

பல்லின மக்களும் சுதந்திரமாக, ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அரசு இதயசுத்தியுடன் இருந்தால், கட்டாயப் பயிற்சிகளை வழங்கட்டும். ஆனால், அது இராணுவத் துறையிலாக அல்லாமல் விவசாயத் துறையிலாக அமையட்டும். இந்தக் கட்டாய விவசாயப் பயிற்சி, தற்சார்புப் பொருளாதாரத்தை மேம்படுத்தி நாட்டை கடனில் இருந்து மீட்டுவரவாவது உதவும். புரியட்டும் தெளியட்டும்.

## இன்றைய கருத்துச்சித்திரம்

இளையோருக்கு இராணுவப் பயிற்சி வழங்க அமைச்சர் சிபாரசு – செய்தி



நன்றி - அவந்த ஆட்டிகல

# இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் முன்னேற்பாடே இராணுவப் பயிற்சி

## எம்.பி மனுஷ நாணயக்கார கடும் கண்டனம்



**கொழும்பு, ஜன.20**

**நாட்டில் பாசிசவாத இராணுவ ஆட்சியை உறுதிப்படுத்தும் முன்னேற்பாடாகவே 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சியளிக்க உத்தேசித்துள்ளோம் என பொலிஸ்துறைக்கு பொறுப்பான அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் நாட்டில் இராணுவ ஆட்சியை உறுதிப்படுத்தும் முன்னேற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது. சிவில் சமூகத்தவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்க முயற்சிப்பதன் மூலம் அவர்களின் மனோபாவத்தை மாற்ற முயற்சிக்கப்படுகிறது - என்றார். (வ-இ)

## ரணிலின் வலது கரம் சஜித்துடன் சங்கமம்?

கொழும்பு, ஜன. 20

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் வலது கரம் என்று அடையாளப்படுத்தப்படும் ரவி கருணாநாயக்க மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோர் விரைவில், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்ளவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

ரவிக்குப் பதிலாக அகிலவிராஜ் காரியவசம் கட்சியின் உதவித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலராக வருவதற்கு ரவி கருணாநாயக்க விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், கட்சித் தலைமையிடம் இருந்து சாதகமான பதில் எதுவும் வரவில்லை.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் விசுவாசிகளே கட்சியின் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என அதிருப்தியும் எழுந்திருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே, ரவி, நவீன் ஆகியோர் சஜித்துடன் சங்கமமாகவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (ஒ-இ)



## முதியோர் தொகை அதிகரிக்கும் நாடாக இலங்கை

கொழும்பு, ஜன.20

தெற்காசியாவில் முதியோர் தொகை வேகமாக அதிகரித்து வரும் நாடாக இலங்கை காணப்படுகிறது என ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

2030ஆம் ஆண்டில், இலங்கையில் 5 பேரில் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் என்றும், இவர்களில் அதிகம் பேர் பெண்களாக இருப்பார்கள் என்றும் கணிப்பிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வடக்கு – கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்

## நாடாளுமன்றில் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

**கொழும்பு, ஜன. 20**
**தமிழர்கள் இனியும் இந்த நாட்டின் சிங்களவர்களுடன் இணைந்து வாழ முடியுமா என்பதை அறிந்துகொள்ள வடக்கு – கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்.**
**இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சபையில் நேற்று கோரிக்கை விடுத்தார்.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தானே போரை வென்றேன், நானே பிரபாகரனை கொன்று இழுத்து வந்தேன் என அண்மையில் கிழக்கில் ஒரு இடத்தில் கூறியுள்ள நிலையில், இந்த நாட்டின் மீது நடவடிக்கை எடுக்க வேறு என்ன சாட்சியங்கள் தேவை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'இந்த நாட்டில் இனியும் தமிழர்கள், சிங்களவர்கள் இணைந்து வாழ முடியாது என்பதற்கு ஜனாதிபதியே சாட்சியாக உள்ளார். ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பேசினால் அவரைக் கொலை செய்வேன் எனக் கூறும் ஜனாதிபதியின் கீழ் சிங்களவர்களுக்கே இந்த நிலை என்றால் தமிழர்கள் இந்த நாட்டில் வாழ முடியுமா? இவ்வாறான ஜனாதிபதியின் கீழ் இந்த நாட்டில் நீதி கிடைக்குமா?. இந்த நாட்டில் இனியும் தமிழர்கள் வாழ முடியுமா என்பதை அறிந்துகொள்ள வடக்கு, கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்குத் தயாராக வேண்டும். இதற்காக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிடம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்' என்றார்.
(ம-22)

# கடனைச் செலுத்த வளங்கள் விற்பனை

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.20
அரசு நாட்டின் கடனைச் செலுத்துவதற்காக, தேசிய வளங்களை விற்பனைசெய்து வருகிறது என்று தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
இந்த ஆண்டு மட்டும் 5.8 பில்லியன் கடன் தொகையைத் திருப்பச் செலுத்த வேண்டியுள்ளது.
இதற்காக எண்ணெய்க் குதங்கள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் உள்ளிட்ட பெறுமதிமிக்க வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய அரச முயற்சிக்கிறது.
பொது ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த துறைமுகங்களை ஒரு அத்தியாவசிய சேவையாக அரசு அறிவித்துள்ளது. அவ்வாறு இருக்கும்போது, ஏன் துறைமுகத்தை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கின்றது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (க-இ)

# 11 மில்லியன் இலங்கையருக்கு கொவிட் தடுப்பூசி கிடைக்கும்

## அமைச்சரவைப் பேச்சாளர் நம்பிக்கை



கொழும்பு, ஜன. 20
அடுத்த மாத இறுதிக்குள் 11 மில்லியன் இலங்கையர்கள் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வார்கள் என்று அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், தடுப்பூசியை 50 சதவீதம் இலவசமாக வழங்க அரசு தீர்மானித்துள்ளது. தடுப்பூசியை பெற்றுக்கொள்ள தற்போது நான்கு உற்பத்தியாளர்களுடன் அரசு பேச்சு நடத்துகின்றது, என்றார்.
இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசியை வழங்க உலக சுகாதார நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.
அத்தோடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி ஏற்றுமதியின்போது இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

# கொரோனா மருந்து குறித்து விரைவில் அறிவிக்கப்படும்!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன.20
இலங்கை பயன்படுத்தவுள்ள கொரோனா வைரஸ் மருந்து குறித்து விபரங்கள் பொதுமக்களுக்கு விரைவில் அறிவிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது என்று சுகாதார ஊக்குவிப்புப் பணியகத்தின் இயக்குநர் வைத்தியர் பாலித கருணபெரும தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாத் தடுப்பு மருந்தைக் கொள்வனவு செய்வதற்கான பல நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது. கொவக்ஸ் திட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் மருந்து எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது குறித்த முழுமையான அறிக்கையொன்று உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
உலக சுகாதார ஸ்தாபனம் 20 வீதமான மருந்தை இலவசமாக வழங்கத் தீர்மானித்துள்ளது.
மருந்து எவ்வாறு விநியோகிக்கப்படும், யார் அதை முதலில் பெற்றுக்கொள்ளவுள்ளனர் என்பவை குறித்த அறிவிப்புக்களும் வெளியாகவுள்ளன.
கொரோனா மருந்தை வழங்கும்போது எவருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்பது குறித்த பட்டியல் உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது- என்றார். (ற-இ)

# 15-20 ஆயிரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்

கொழும்பு, ஜன. 20
இலங்கையில் ஒரு நாளைக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தொற்று நோயியல் தலைமை நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.



மேலும், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்டவர்களை சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தும் செயற்பாடு விரைவு படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.
நோயாளிகளிடம் இருந்து சமூகத் தொடர்புகளை தடுப்பதே நோய்ப் பரவுதலை தடுக்கும் வழி என்றும் அவர் தெரிவித்தார்.
இந்த நிலையில் சுகாதார அதிகாரிகள் பி.சி.ஆர் பரிசோதனைகளை போதுமான அளவு மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சுதத் சமரவீர தெரிவித்தார். (ரி5)

# அண்டை நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசி

## இந்தியா திட்டம்



**இராஜதந்திர நடவடிக்கையின் ஒரு பகுதியாக இரண்டு வாரங்களில் கொரோனாத் தடுப்பூசியை அண்டயை நாடுகளுக்கு அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது.**
**அந்தவகையில் முதலில் நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், மியான்மர், இலங்கை, ஆப்கானிஸ்தான், மாலைதீவுகள் மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகளுக்கு தடுப்பூசியை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நல்லெண்ண அடிப்படையில் இந்த நடவடிக்கையை இந்தியா எடுத்துள்ளது என்றும் அதன்பிறகு, சம்பந்தப்பட்ட நாடுகள் சீரம் நிறுவனம் அல்லது பாரத் பயோடெக் ஆகியவற்றிலிருந்து பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**
**கொரோனாத் தடுப்பூசியை கடந்த சனிக்கிழமை முதல் பாவனைக்கு எடுத்துக்கொள்ள இந்திய அரசு தீர்மானித்தது. முதல் நாளில் கிட்டத்தட்ட 1.9 இலட்சம் பேர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப)**

# 'சினோவாக்' தடுப்பூசியை இலங்கைக்கு வழங்க ஒப்புதல்

## சீன நிறுவனங்கள் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.20**
**கொரோனாவுக்கு எதிராக சீனா தயாரித்த 'சினோவாக்' தடுப்பூசியை இலங்கைக்கு வழங்க சீன நிறுவனங்கள் ஒப்புக் கொண்டுள்ளன.**
**சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கோஹோன, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.**
**கொரோனா வைரஸுக்கு எதிராக சீனா தயாரித்த சினோவாக் தடுப்பூசி 78 சதவீத அளவில் தொற்றாளர்களில் வினைத்திறனை காண்பித்துள்ளது என தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.**
**(ச-இ)**

# நாடு திரும்பினர் இந்திய மீனவர்கள்

**கொழும்பு, ஜன. 20**
**இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 33 இந்திய மீனவர்கள் அடங்கிய குழு நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டது.**
**(ஒ.இ)**

சுகாதார விதிமீறல்;

## நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கலாகும்



கொழும்பு, ஜன.20

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறும் விதத்தில் செயற்படும் 126 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் மேற்கொள்ளவுள்ளோம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களில் 848 நிறுவனங்கள் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## கழிவுத் தேயிலையுடன் எழுவர் கைதாகினர்

கொழும்பு, ஜன.20

29 ஆயிரம் கிலோகிராம் கழிவுத் தேயிலையுடன் 7 பேர் சீதுவ கொடுகொட பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற ரகசியத் தகவலுக்கு அமைவாக இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். சுற்றிவளைப்பில் கழிவுத் தேயிலை மற்றும் அதை ஏற்றிச்சென்ற பாரவூர்தி என்பனவும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தேயிலையை இலங்கைத் தேயிலை என்று குறிப்பிட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)


## கிலோ கணக்கில் தேங்காய் விற்பனை

கொழும்பு, ஜன.20

தேங்காய்களின் விலை அதிகரிப்பையடுத்து கிலோ கணக்கில் தேங்காய்களை கொள்வனவு செய்யும் மாற்று வழியை மக்கள் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். காலி அம்பலங்கொடை, இரத்தினபுரி எம்பிலிப்பிட்டிய போன்ற பிரதேசங்களில் கிலோ கணக்கில் தேங்காய் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ தேங்காய் 120 ரூபா முதல் 140 ரூபா வரை விற்கப்படுகிறது என அறிய முடிகின்றது. (வ-இ)

# சுதந்திர தின கொண்டாட்டங்கள் வழமைபோன்று இடம்பெறும்

### கூறுகிறார் கமால் குணரத்ன



**கொழும்பு, ஜன.20**

**இலங்கையின் 73ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் இம்முறையும் நடைபெறவுள்ளதன. பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன இதனைத் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முழு உலகமும் கொரோனாத் தொற்றுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்நிலையில் நாட்டின் சுதந்திரதினம் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படுவதைப் போன்று இம்முறையும் கொண்டாடப்படவுள்ளது.

கடுமையான சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய சுதந்திர தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தைப் போன்று சுதந்திர சதுக்கத்தில் சுதந்திர தின கொண்டாட்டங்கள் இடம்பெறும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு விசேட பிரதிநிதிகளும் நிகழ்வின் பிரதம பங்குபற்றாளர்களாக இருப்பார்கள் - என்றார். (ந-இ)

மேல் மாகாணத்தில்

## கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க கலந்துரையாடல்

கொழும்பு, ஜன.20

மேல் மாகாணத்தில் அடுத்த இரு வாரங்களுக்குள் அனைத்துத் தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளையும் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து விசேட கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

சுகாதார அதிகாரிகள், ஜனாதிபதி செயலணி மற்றும் முக்கிய அதிகாரிகள் மட்டத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேல் மாகாணத்தில் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## ரணில் செல்லும்வரை எம்.பி பதவி வெற்றிடம்

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு செல்லும் வரை அந்த இடத்தை வேறு எவர் மூலமும் நிரப்பப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வஜிர அபேவர்தன நேற்றுத் தெரிவித்தார். ரணில் விக்ரமசிங்க சரியான நேரத்தில் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குள் நுழைவார். ரணில் நாடாளுமன்றம் செல்ல இப்போது நேரம் சரியாக இல்லை. எனவே தற்காலிக அடிப்படையில்கூட வேறு எவரும் நாடாளுமன்றத்துக்குச் செல்ல வாய்ப்பில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## பி.சி.ஆர். சோதனைக்கு ஒத்துழைக்காத எம்.பிக்கள்

கொழும்பு, ஜன. 20

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்த நிலையில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் அதற்கு 40க்கும் குறைவானோரே ஒத்துழைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,இ)



## துப்பாக்கியுடன் இருவர் கைது!

வவுனியா, ஜன.20

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியிலுள்ள பொலிஸ் சோதனைச்சாவடியில் துப்பாக்கி, வெடிமருந்து மற்றும் பன்றி இறைச்சி கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணித்த வாகனத்தை மறித்துச் சோதனை மேற்கொண்டபோது, நாட்டுத் துப்பாக்கி, வெடிமருந்து மற்றும் பன்றி இறைச்சியுடன் வாகனத்தில் பயணித்த 34 மற்றும் 52 வயதுடைய இருவரும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் நேற்று மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-110)

## தந்திரோபாய அணுகுமுறை இல்லையேல் பெரும் ஆபத்து

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் சிவப்புக் கொடி

கொழும்பு, ஜன.20

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த ஏனைய நாடுகள் பின்பற்றும் தந்திரோபாய அணுகுமுறையை இலங்கை பின்பற்றாவிட்டால், ஜனவரிக்கு பின்னர் என்ன நடக்கும் என்பது தெரியாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹரித அலுத்கே எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸுக்கு எதிரான தந்திரோபாய அணுகு முறையை எங்கள் நாட்டுக்கு பொருந்தும் விதத்தில் நாங்கள் பயன்படுத்தவேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பி.சி.ஆர் சோதனைகளை அதிகரித்து தொற்றாளர்களைக் கண்டுபிடிக்க வேண்டும், நகரங்களுக்கு இடையே போக்கு வரத்துக் கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும், இதன்மூலம் மக்கள் மத்தியில் வைரஸ் பரவும் அபாயத்தைகுறைக்கவேண்டும். கொரோனா வைரஸ் மேல் மாகாணத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. நோயாளிகள் புதிதாக அடையாளம் காணப்படுவதால் மருத்துவமனைகளில் இடவசதி இல்லாத நிலை உருவாகி வருகின்றது. மருத்துவமனைகள் தங்களால் இயலக்கூடிய அளவைக் கடந்துவிட்டால் நாட்டின் சுகாதார அமைப்பு முறை முற்றாக வீழ்ச்சி காண நேரிடும் என்பதால் தொற்றுநோய்ப் பிரிவும், சுகாதார அமைச்சும் ஜனாதிபதியை வலியுறுத்த வேண்டும் என, அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)


# கொரோனா நெருக்கடிக்குள்ளும் சீனப் பொருளாதாரம் வளர்ச்சி!!

பீஜிங், ஜன. 20

**கொரோனாப் பெருந்தொற்று நெருக்கடிக்கு மத்தியிலும் சீனாவின் பொருளாதாரம் 2.3 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.**

**உலகின் மிகப்பெரும் பொருளாதார நாடான சீனாவும் கொரோனா வைரஸால் பொருளாதாரச் சரிவை எதிர்கொண்டது. அதேசமயம் கொரோனா வைரஸ் பரவல் சீனாவில் தொடங்கி இருந்தாலும், முதலாவதாக அதில் இருந்து மீண்டு வந்ததும் சீனாதான். அதன் பிறகு அந்த நாடு பொருளாதார முன்னேற்றத்தில் தீவிர கவனம் செலுத்தியது.**

இதன் மூலம் சீனாவின் பொருளாதாரம் கடந்த ஆண்டில் 2.3 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகவும் குறைவான வளர்ச்சியையே கண்டுள்ளது. சீன தேசிய புள்ளிவிவர அமைப்பு வெளியிட்டுள்ள தகவலின்படி 2020ஆம் ஆண்டில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 15.42 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. இது கடந்த 2019ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட 2.3 சதவீதம் அதிகமாகும். (ம)



## துணியில் தைத்த மாஸ்க் வகைகள் புதிய வைரஸ் தொற்றை தடுக்காது

பாரிஸ், ஜன. 20

வேகமாகப் பரவும் புதிய வைரஸிடம் இருந்து தப்புவதற்கு தரமான மாஸ்க் வகைகளை அணியுமாறு பிரான்ஸின் பொதுச் சுகாதாரத்து க்கான உயர் அதிகார சபை அறிவுறுத்தி உள்ளது.

இரண்டாம் வகைக்குள் அடங்கும் துணியினாலான மாஸ்க்குகள் காற்றை வடிகட்டும் திறன் குறைந்தவை. அவை புதிய வைரஸ் தொற்றைத் தடுக்கக்கூடியவை அல்ல என்று பரிந்துரைக்கப்பட்டு ள்ளது.



மாற்றமடைந்த இங்கிலாந்து வைரஸ், தென்னாபிரிக்க வைரஸ் என்பன ஐரோப்பாவில் வேகமாகப் பரவி வருவதால் மாஸ்க் அணியும் நடைமுறைகளில் புதிய ஆலோசனைகளை சுகாதார அதிகார சபை வெளியிட்டுள்ளது. (ம)

## ஆர்ஜென்ரீனாவில் நேற்று நிலநடுக்கம்

தென்னமெரிக்க நாடான ஆர்ஜென்ரீனாவில் நேற்றுச் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.4 அலகுகளாகப் பதிவானது.

இதுகுறித்து, ஆர்ஜென்ரீனா தேசிய பேரிடர் மேலாண்மை தரப்பில், 'சான் ஜுவான் மாகாணத்தில் இன்று (நேற்றுச் செவ்வாய்க்கிழமை) சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.4 அலகுகளாகப் பதிவாகியுள்ளது. நிலநடுக்க அதிர்வுகள் நாட்டின் பல பகுதிகளிலும் உணரப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆப்கானில் துப்பாக்கிச்சூடு நீதிபதிகள் இருவர் இறப்பு



காபூல், ஜன. 20

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு பெண் நீதிபதிகள் உயிரிழந்தனர்.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் ஊடகங்கள், 'தலிபன்களுடன் அமைதிப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் நிலையில், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் ஞாயிற்றுக் கிழமை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உச்ச நீதிமன்றத்தின் பெண் நீதிபதிகள் இருவர் பலியாகினர். இந்த துப்பாக்கிச்சூட்டில் அவர்களது ஓட்டுநர்களும் காயமடைந்தனர்' என்று செய்தி வெளியிட்டன.

பெண் நீதிபதிகள் கொல்லப்பட்டுள்ளமை ஆப்கானிஸ்தானில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் இதனை தலிபன்கள் நடத்தி இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபன்களுடனான போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், அவ்வப்போது ஆப்கான் அரசு கோரிக்கை விடுத்து வருகிறது. மேலும், ஆப்கானிஸ்தான் அரசு மற்றும் தலிபன்கள் இடையேயான பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் கத்தாரில் நடைபெறும் அமைதிப் பேச்சைக் குழப்பும் வகையிலான செயலாக இது இருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கொரோனாவுடன் வாழப்பழகுதல் என்பது யாதெனில்...

**கொரோனாத் தொற்றுத் தொடர்பான விஞ்ஞான ரீதியான உண்மைகள் மிகவும் ஆழமானவை. ஆனால் அவை அனைத்தும் சாதாரண மக்களுக்கு பயம் ஊட்டுவனவாக அமையக்கூடாது.**

மருத்துவர். சி.யமுனாநந்தா

கடந்த ஒருவருட காலமாக உலகின் மூலை முடுக்கு எங்கும் ஏற்பட்ட பெருந்தொற்றின் மூலம் நவீன உலக இயக்கத்தில் பெரும் முடக்கநிலைக்குக் கொரோனா கொண்டு வந்து விட்டுள்ளது என்றால் அது மிகையாகாது. ஆனால் அதனை எதிர்கொண்டு முன்னேற மனித குலம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

கொரோனாத் தொற்றின்போது சமூக இயக்கத்தினை செயற்படுத்த ஐந்து அம்சங்கள் இன்றியமையாதவையாகின்றன. அவையாவன,

1. விஞ்ஞான ரீதியான அணுகல்
2. வள முகாமைத்துவம்
3. பயிற்சி அளித்தல்
4. நிர்வகித்தல்
5. தொடர்பாடல்

இந்த ஐந்து அம்சங்களும் சமூக இயங்குதளத்தில் கொரோனாவுக்கு ஊடாக வாழ்தலில் சிறப்பாக அமைய வேண்டும் என்பதனை கடந்த ஒரு வருட அனுபவம் எமக்குக் கற்றுத் தந்துள்ளது. இவற்றுடன் அடிப்படைச் சுகாதார பழக்கவழக்கங்களையும் நாம் பேணுதல் வேண்டும். அதாவது சமூக இடைவெளி பேணுதல், கை கழுவுதல், தூய்மியின் பிரயோகம், முகக்கவசம் அணிதல் என்பவற்றையும் நாம் தவறாது கைக்கொள்ளுதல் அவசியம்.




முதலாவதாக மருத்துவ சேவையைக் கருதும்போது கொரோனாத் தொற்றுத் தொடர்பான விஞ்ஞான ரீதியான உண்மைகள் மிகவும் ஆழமானவை. ஆனால் அவை அனைத்தும் சாதாரண மக்களுக்கு பயம் ஊட்டுவனவாக அமையக் கூடாது. உதாரணமாக தற்போது கொரோனாத் தொற்று சமூகப் பரவல் அடைந்துள்ளதா இல்லையா என்ற கேள்விக்கான விடை, கொரோனாத் தொற்று வீரியத்தன்மை குறைந்து விட்டதா என்பதற்கான விடை, கொரோனாத் தொற்றுக்கு தடுப்பூசி போடப்பட வேண்டிய தேவை ஏற்படுமா என்பதற்கான விடை விஞ்ஞான ரீதியில் அணுகப்படுதல் வேண்டும். அதே போல் நோய்க் காவிகள் சமூகத்தில் அடையாளம் காணப்படாது உள்ளபோது இறந்த கொரோனாத் தொற்று உடையவரின் உடலைப் புதைப்பது ஆபத்து இல்லை என்ற உண்மை, இவை யாவும் அடிப்படை விஞ்ஞானத்தின் விடைகளே.

கொரோனாத் தொற்றுத் தடுப்பில் மனித உரிமை அணுகல் மிகவும் இன்றியமையாதது. மருத்துவ சேவைக்கு அப்பால் ஏனைய சமூக வளங்கள் சேவைகளான கல்விச் சேவை, வங்கிச் சேவை, நிர்வாகச் சேவை, தொலைத் தொடர்புச் சேவை போன்ற பலவும் மேற்கூறிய ஐந்து அம்சங்களான விஞ்ஞான அணுகல், வள முகாமைத்துவம், பயிற்சி அளித்தல், நிர்வகித்தல், தொடர்பாடல் என்பவற்றை தமது செயற்பாட்டில் பரிமாணமாக்கல் மிகவும் முக்கியமாகும்.

கொரோனாத் தொற்றுத் தொடர்பாக தேவையற்ற பயம் தேவையில்லை. இதனைச் சாதாரண சுவாசத் தொற்றுநோய் போல் கருத வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. சமூக இடைவெளி பேணிய சமூக இணைப்பைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் நாம் எல்லோரும் உள்ளோம். சமூக இணைப்பை நோய்ப் பரம்பலற்ற முறையில் வலுப்படுத்துவதில் விஞ்ஞான ரீதியான அணுகல், வள முகாமைத்துவம், பயிற்சி நெறிகள், நிர்வகிக்கும் முறைமை, தொடர்பாடல் மேன்நிலை என்பன சமூக மட்டத்திலும், சிறு குழுக்கள் மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும் நிர்வாக நிலையிலும் அரசியல் ஜனநாயக மட்டத்திலும் கொரோனாக் கால சமூக இணைப்பு பலப்படுத்தல் முக்கியமானது. ஏனெனில் அது தவறும் பட்சத்தில் சமூகத்தில் பின்தங்கியவர்கள் மற்றும் இன, மத, பிரதேச ரீதியான புறக்கணிப்பு கொரோனாக் கட்டுப்பாடு என்ற போர்வையில் நிகழ்வதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன.






# கடற்படையினரின் காணி அபகரிப்புக்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை

## மண்கும்பான் மக்கள் மனு

யாழ்ப்பாணம், ஜன.20

**வேலணை, மண்கும்பான் பகுதியில் கடற்படையால் முன்னெடுக்கப்படவுள்ள பொது மக்களின் காணி சுவீகரிப்பை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று தெரிவித்து, அந்தக் காணிகளின் உரிமையாளர்கள், யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களத்துக்கு நேற்று மனு ஒன்றைக் கையளித்தனர்.**

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள நில அளவைத் திணைக்களத்துக்கு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நேற்றுக் காலை சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினர் செ. பார்த்தீபன், தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி உப செயலர் க. குணாளன் ஆகியோர் அந்த மனுவைக் கையளித்தினர்.



மனுவில் உள்ளதாவது;

தங்களால் அளவீடு செய்யத் திட்டமிட்டுள்ள காணியானது எமது பாரம்பரிய அறுதி உறுதிக் காணியாகும். கடந்த பல நூற்றாண்டுகளாக, சந்ததி சந்ததியாக விவசாயம் செய்து குடியிருந்த நிலப்பரப்பு என்பதுடன், 1991ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக நாம் மாவட்டத்தின் வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றபோது எவ்வித அனுமதியும் இன்றி எமது சொந்தக் காணியில், கடற்படை முகாம் அமைத்திருப்பது மட்டுமன்றி, எமது வாழ்வாதாரக் காணியை நிரந்தரமாக சுவீகரித்து கடற்படை முகாம் அமைக்கப்படுவதை நாம் எது விதத்திலும் அனுமதிக்கப்போவதில்லை என்பதுடன் தங்களையும் நில அளவீட்டுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கமாட்டோம் என எமது கடும் ஆட்சேபனையையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன் எமது வேதனைகளையும் வெளிப்படுத்துகிறோம். எனவே இந்தக் கோரிக்கையை ஏற்று இந்தச் செயற்பாட்டைக் கைவிடுமாறு தங்களை வேண்டிக்கொள்கிறோம்- என்றுள்ளது. (ப)

## 'ஒரு வங்கி ஒரு கிராமம்' தத்தெடுக்கும் செயற்றிட்டம்

கிளிநொச்சி, ஜன.20

"ஒரு வங்கி ஒரு கிராமம்" என்ற அடிப்படையில் தத்தெடுக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி திருவையாறு கிராமத்தில் நேற்று வடமாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் பதிவு செய்யப்பட்ட வங்கிகள், ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து அனைத்துத் துறைகளையும் ஒன்றிணைத்து குறித்த கிராமத்தவர்களது பல்துறை சார் உற்பத்திகளை இனங்கண்டு அவர்களின் பொருளாதாரத்தை மெருகூட்டி பசுமையான கிராமமாக மாற்றவேண்டும் என்பதே இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இந்த நிகழ்வு கிளிநொச்சி, மாவட்டச் செயலர் தலைமையில் திருவையாறு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

வங்கிகள் கடன்திட்டங்களை வழங்குவதிலிருந்து சற்று மாறுபட்டு சகல துறைகளையும் ஒருங்கிணைத்து பொதுமக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலமைந்த வேலைத்திட்டங்களில், கிராமத்துக்கு மிகப்பொருத்தமானவற்றை இனங்கண்டு, பயிற்சிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம், இளம் சமூகத்தை பொருளாதார அபிவிருத்தி சார்ந்து முன்னேற்றும் வகையில் குறித்த செயற்றிட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (ஐ-6)

## கடும் மழையால் கால்நடைகள் உயிரிழப்பு

### முட்கொம்பனில் சம்பவம்

கிளிநொச்சி,ஜன.20

பூநகரி பிரதேசத்தின் முட்கொம்பன் பகுதியில் கடந்த வாரம் பெய்த கடும் மழை காரணமாக தமது வாழ்வாதாரத்துக்காக மக்களால் வளர்க்கப்பட்ட சுமார் 50 க்கும் மேற்பட்ட ஆடுகள் உயிரிழந்துள்ளன.

விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளோர் ஆடுகள் உயிரிழந்ததால், தமது வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்று கவலை தெரிவித்தனர். (ஐ-ரி1)

## புத்தூர் மேய்ச்சல் தரவையில் ஐந்து மாடுகள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

புத்தூர் பகுதியிலுள்ள மேய்ச்சல் தரவையில் 5 மாடுகள் உயிரிழந்த நிலையில் காணப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக் காலமாக கால்நடைகள் அம்மை நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையிலேயே புத்தூர் பகுதியிலுள்ள மேய்ச்சல் தரவையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கால்நடைகள் அம்மை நோய் எனப்படும் ஒருவகை தோல் நோயால் பாதிக்கப்படுகின்றன. இதனால் குறிப்பாக வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (ஐ-25)



# பெயரளவில் மாத்திரமே இந்து அமைப்புக்கள்; இனநலன் சார்ந்து செயற்பாடுகள் இல்லை

## சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் குற்றச்சாட்டு

வவுனியா,ஜன.20

இந்து மதத்தின் பெயரால் பல அமைப்புகள் செயற்படுகின்றபோதிலும் தற்போதைய சூழ்நிலையில் அவை பெயரளவில் மாத்திரம் தான் அமைப்புகளாக உள்ளன.

இனநலன் சார்ந்து எவ்வித செயற்பாடுகளையும் அவை செய்வதாகத் தெரியவில்லை என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு குருந்தூர் ஐயனார் ஆலய அழிப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக் காலமாக எமது வழிபாட்டுத் தலங்கள் பலவற்றை நாம் இழந்து கொண்டிருக்கின்றோம். அதனுடைய தொடராக பல வருடங்களாக முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் வழிபட்டுவந்த கிராமிய வழிபாட்டோடு ஒன்றிய ஆதி ஐயனார் ஆலயச் சூலம் உடைத்து எறியப்பட்டு, புத்தர் சிலை கொண்டுவரப்பட்டு பௌத்த வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது அனைத்துத் தமிழ் மக்கள் மத்தியிலும் மிக வேதனையான செயலாகப் பார்க்கப்படுகிறது.

தொடர்பே இல்லாத இடங்களில் புதிது புதிதாக இவ்வாறான செயல்களைச் செய்வது திட்டமிட்ட செயலாகவே எண்ணத் தோன்றுகின்றது.

தற்போது ஏதோ குருந்தாசேவ பௌத்த விகாரையின் சிதைவுகள் உள்ளன என்று இராணுவத்தின் ஆதரவோடு தொல்லியல் திணைக்களம் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது.

புத்தர்சிலை ஒன்று குருந்தூர் மலைப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அகழ்வாராச்சிக்கு புத்தபகவான் வர வேண்டிய தேவை என்ன? ஆக ஒட்டு மொத்தமான தமிழர் வழிபாட்டு நிலங்கள் பறிபோய்க்கொண்டே இருக்கின்றன.

எமது வழிபாட்டுச் சின்னங்கள் அழிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

இவை அனைத்தையும் கண்டும் காணாதது போல் கடந்து செல்கின்றனர்.

அரசியல் வாதிகளும் ஆன்மீகவாதிகள் அல்லது ஆன்மீக அமைப்புகளும். அவர்கள் பெயரளவிலேயே மட்டுமே அமைப்புகள் சார்ந்து இருக்கின்றனர். இனமத நலன்களை கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை - என்றார். (ப-110)

# நாட்டில் சமூகத்தொற்று இதுவரை ஏற்படவில்லை

## கூறுகிறார் மருத்துவர் சுதத் சமரவீர



**கொழும்பு. ஜன.20**
**நாட்டில் இதுவரையில் சமூகத்தொற்று ஏற்படவில்லை என தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் நிபுணத்துவ மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

மேலும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் வரைவிலக்கணத்துக்கு அமைய இலங்கையில் இன்னும் சமூகத்தொற்று ஏற்படவில்லை. எனினும் நாங்கள் எங்கு சென்றாலும் அந்தப் பகுதிகளில் கொவிட் தொற்றாளர்கள் இருப்பார்கள். இத் தொற்றாளர்கள் சமூகத்தில் தொற்றாளிகள் இருக்கின்றார்கள் என்பதும் கொவிட் சமூகத்தொற்றாக பரவியுள்ளது என்பதும் இருவேறுபட்ட விடயங்கள் என அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# புதிய வைரஸ் தொடர்பில் இலங்கையர் அவதானம்!

கொழும்பு, ஜன.20
உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றின் புதிய மாற்றமாக 'கொவிட் டன்' என்ற வைரஸ் பரவி வருகின்றது. இதனால் மிகவும் அவதானமாக இருக்குமாறு சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.
இந்த வைரஸ் நாக்கில் சிகப்பு நிறத்தில் புள்ளிகள் அல்லது தழும்புகளை ஏற்படுத்துகிறது. நாக்கு முழுவதும் இவ்வாறான அறிகுறி காணப்பட்டால் அதனை கொரோனாத் தொற்று என சந்தேகிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)


# அபிவிருத்தி எனும் மாயையால் நிலங்களை பறிகொடுக்கிறோம்!

## கூட்டமைப்பு எம்.பி கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.20
அபிவிருத்தி எனும் மாயைக்குள் எமது மக்கள் அகப்பட்டு, எமது பிரதேசத்தைப் பறிகொடுக்கும் நிலைமைக்குள் நாங்கள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.
மேலும், அபிவிருத்தி என்ற போர்வையில் எமது பிரதேசங்கள் கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந் நிலைமை மாறவேண்டும். இந்த நாட்டின் நிலைமையை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அதற்கு ஏற்றால் போல் அனைவரும் வாழவும் பழகிக்கொள்ள வேண்டும் - என்றார். (ந-இ)

# 18,149 நபர்கள் மீது கொரோனா சோதனை

கொழும்பு, ஜன.20
தனிமைப்படுத்தல் விதிமுறையின் கீழ் மேல் மாகாணத்தில் 18 ஆயிரத்து 149 நபர்கள் மீது விரைவான அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
இவர்களில் 203 பேர் கொவிட் 19 நோயால் பாதிக்கப்பட்ட நபர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
மேல் மாகாணத்திலிருந்து வெளியேறிய 10 ஆயிரத்து 926 நபர்கள், முகக்கவசம் அணியத் தவறிய 2 ஆயிரத்து 807 நபர்கள், மீன் கடைகளில் 661 நபர்கள், கண்காட்சிகள் மற்றும் நடைபாதை கடைகளில் ஆயிரத்து 146 நபர்கள், கொழும்புக் கோட்டை மற்றும் காலி முகத்திடலில் நடமாடிய 385 நபர்கள் ஆகியோர் மீது நடத்தப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். சோதனைகள் மூலமே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ற-இ)



# மட்டு. மருத்துவமனையில் தாதியர்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஜன. 20
மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் தாதியர்களால் பணிப் புறக்கணிப்பு போராட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.
அரச தாதியர் சங்கம் மற்றும் ஐக்கிய தாதியர் ஒன்றியம் என்பவை இணைந்து மருத்துவமனை நிர்வாக கட்டடத்துக்கு முன்பாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.
இந்த மருத்துவமனையில் பணிபுரியும் தாதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்ட நிலையில், அவர் சிகிச்சைக்காக காத்தான்குடி மருத்துவமனையிலுள்ள தாதியர்களுக்கான சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.
அவரை சேர்ப்பதற்கு காத்தான்குடி மருத்துவமனை வைத்திய அத்தியட்சகர் மறுப்புத் தெரிவித்ததன் காரணமாக அவர் பெரியகல்லாறு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இதனைக் கண்டித்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ரி5)

# கடந்த 18 நாள்களில் 10,289 தொற்றாளர்கள்

## *71 பேர் பலி!*

கொழும்பு, ஜன.20
நாட்டில் கடந்த 18 நாள்களில் மாத்திரம் 10 ஆயிரத்து 289 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.
இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 806 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 120 பேருக்கும் மற்றும் கண்டி மாவட்டத்தில் 809 பேருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.
அத்துடன் வடக்கில் யாழ். மாவட்டத்தில் 45 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 45 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 181 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் மூவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.
அத்துடன் 18 நாள்களில் 71 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

# ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 20
கொரோனாத் தொற்று காரணமாக மூன்று மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை நேற்று மீண்டும் ஆரம்பித்தது.
மட்டக்களப்பு - கொழும்பு இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ் ரயில் உள்ளிட்ட அனைத்து ரயில் சேவைகளும் இந்த மாதம் 25 ஆம் திகதி முதல் செயற்படும் என மட்டக் களப்பு ரயில் சேவை நிலையம் தெரிவித்தது. (ரி5)

# இனவழிப்புக்கு எதிராக சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை அவசியம்

## *ஆதி ஐயனார் ஆலய இடித்தழிப்பு விவகாரம் குறித்து நாடு கடந்த தமிழீழ அரசு அறிக்கை*

நியூயோர்க், ஜன. 20
ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தேசத்தில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எதிராக சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையொன்றின் அவசியத்தை ஆதி ஐயனார் ஆலயம் அழிக்கப்பட்ட சம்பவம் மீளவும் வெளிப்படுத்தியுள்ளது என்று நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.
தமிழ் மக்களால் தொன்றுதொட்டு வழிபட்டு வரப்பட்ட முல்லைத்தீவு குமுளமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் ஆதி ஐயனார் ஆலயம் உடைத்தெறியப்பட்டு, அங்கு பௌத்த விகாரையின் சிதைவுகள் இருந்தன எனக் குறிப்பிட்டு ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணையுடன் இலங்கையின் தொல்லியல் துறை அந்தப் பகுதியை அபகரித்துள்ளமையானது தமிழர் தேசத்தின் மீதான பண்பாட்டு இன அழிப்பாக காணப்படுகின்றது என்று நாடுகடந்த தமிழீழ அரசு சுட்டிக்காட்டியுள்ளது.
அது மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசு தனது அரச திணைக்களங்கள் ஊடாக பல்வேறு பெயர்களிலும், தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்துக் கொள்வதும், சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதும் மட்டுமல்லாது, தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளங்கள் மீதான பண்பாட்டு இனவழிப்பையும் தொடர்ந்து தனது கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின் ஒரு பகுதியாக செய்து வருகின்றது.
தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணையுடன் தமிழர் தேசத்தின் மீதான சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கலை சிங்கள பேரினவாத அரசு தீவிரப் படுத்தியுள்ள இவ்வேளையில் தமிழர் தேசத்தில் சர்வதேச பாதுகாப்பு பொறி முறையொன்றின் அவசியத்தை மீள நாம் வலியுறுத்துகின்றோம் என்று நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது. (ஒ.இ)

## இன்றைய நாள்

**மேடம்:** பொருளாதாரப் பிரச்சினை தீரும். பணியிடத்தில் சலுகைகள் கிடைக்கும். தடைபட்டிருந்த பிரார்த்தனைகளை நல்லபடியாக முடிப்பீர்கள். ஆதாயம் உண்டு.

**இடபம்:** ரகசியம் பரப்பியது பற்றிய பிரச்சினை உருவாகலாம். உறவினர்களால் உங்கள் கடன் பிரச்னைகள் குறையும். நண்பர்கள் மன்னிப்புக் கேட்டு நெகிழச் செய்வார்கள்.

**மிதுனம்:** புதிய தொழில்கள் தொடங்க இது உகந்த நேரம். இளைஞர்களின் புதுமுயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். பொருளாதார நெருக்கடி தீரும். முயற்சியில் தடை நீங்கும்.

**கடகம்:** வீட்டிலும், வெளியிலும் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அலுவலகத்தில் உயர்பதவியில் இருப்பவர்கள் நட்பாவார்கள். புகழும், பெருமையும் கூடும்.

**சிம்மம்:** ஒவ்வொரு வார்த்தையையும் மிகக் கவனமாகப் பேச வேண்டும். அலுவலக வேலையில் தவறு நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள். வருமானம் உயரும்.

**கன்னி:** மேலதிகாரி பாராட்டும்படி அலுவலகத்தில் நடந்து கொள்வீர்கள். பணிகளை வேகமாகச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவீர்கள். வெற்றிக்கு வழிவகுக்கும்.

**துலாம்:** கவுரவப் பொறுப்பு தேடி வரும். சமூகத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்பாலினத்தினரின் செயல் காரணமாக சிரமம் ஏற்படலாம். சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத்தாங்கல் நீங்கும்.

**விருச்சிகம்** பெண்கள் வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. உடனடியாக இன்றைக்கு எடுக்கும் முடிவுகள் நற்பலன் தரும். வெளியூர் பய ணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**தனுசு** நற்செய்தி உண்டு. வேலையில் முழுக் கவனம் செலுத்துங்கள். அவசரப் பேச்சினால் குடும்பத்தில் சங்கடம் தலைதூக்கலாம். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**மகரம்** எல்லோரையும் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். இளைஞர்கள் தங்கள் முயற்சியில் வெற்றி அடைவார்கள். அலுவலகத்தில் நிகழும் ஏற்பாடுகள் நிம்மதியைத் தரும்.

**கும்பம்:** சகோதரர்களுக்கு திட்டமிட்டபடி திருமணம் சிறப்பாக முடியும். சேமிக்கத் தொடங்குவீர்கள். திட்டங்களில் தடை ஏற்படலாம். கெட்டவர்களின் தொடர்பு கூடாது. கலை ஆர்வம் வரும்.

**மீனம்:** வாழ்க்கைத் துணைவரால் நலம் உண்டாகும். புகழ் வரும். முயற்சி பலிதமாகி கூடுதல் நன்மை கிடைக்கும் நாள். பழி தீரும். தள்ளிப்போன பணிகள் நல்லபடியாக முடியும்.

# துணுக்காய் பிரதேசத்தில் தொடர்ந்தும் மணல் அகழ்வு

### நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

வன்னேரிக்குளம், ஜன.20

முல்லைத்தீவு துணுக்காயின் புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கவனம் செலுத்த வேண்டும் என்று அப்பகுதி பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த பத்தாண்டுகளாக குறித்த கிராமங்களில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு புத்துவெட்டுவான், கொக்காவில் வீதி வழியாக வெளியிடங்களுக்கு டிப்பர்களில் மணல் கொண்டு செல்லப்படுகின்றது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும், துணுக்காய் பிரதேச செயலகத்திலும் கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்ற கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டு, மனுக்கள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கடந்த காலங்களில் இது தொடர்பில் பேசப்பட்டன. இதன்போது இணைத் தலைவர்கள் மணல் அகழ்வு நடைபெறுகின்ற இடங்களுக்கு நேரில் வருவோம் என்று உறுதியளித்த போதிலும் இதுவரை ஒரு தடவை கூட வருகை தரவில்லை.

அத்துடன் ஐயன்கன்குளத்தில் இருந்து புத்துவெட்டுவான், கொக்காவில் வரை சீரமைக்கப்பட்ட நிரந்தர வீதி மணல் டிப்பர்களால் தற்போது சேதமடைந்துள்ளது.

எனவே மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்டச் செயலகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ஐ-ரி2)

# சிறுமி துஷ்பிரயோகம்; ஓட்டோ சாரதிக்கு மறியல்

சாவகச்சேரி ஜன. 20

பதின்ம வயதுச் சிறுமியைக் கடத்தி வந்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முச்சக்கரவண்டிச் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

திருகோணமலையைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியை முச்சக்கரவண்டியில் கடத்திவந்து நாவற்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்திருந்து, மறுநாள் மீண்டும் முச்சக்கரவண்டியில் ஏற்றிச்சென்ற வேளை முச்சக்கரவண்டியின் சாரதி, கேரதீவு சங்குப்பிட்டிப் பாலப் பகுதியில், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சாரதியிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரை சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். இதன்போதே வரும் 2ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ப-9)

# ஆயிரத்தை நெருங்கியது எழுமாறான பி.சி.ஆர்.

சாவகச்சேரி ஜன. 20

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

நேற்றுக் காலை வரை சாவகச்சேரி சுகாதார பிரிவினரால் 977 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டன. இவர்களில் கடந்த வாரம் எழுதுமட்டுவாழில் நடத்தப்பட்ட பரிசோதனையில் மந்துவிலைச் சேர்ந்த ஒருவர் தவிர்ந்த ஏனைய 976 பேருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# பாடசாலைகளில் வெள்ளம்: தொற்றுநோய் அபாயம்

### பெற்றோர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக மாணவர்களுக்கு தொற்றுநோய் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என்று பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் இயங்குகின்ற 104 பாடசாலைகளில் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். மாவட்டத்தில் பெய்த பெரும் மழையால் சகல குளங்களும் நிரம்பி வழிந்தன. பாடசாலைகள் அமைந்துள்ள வீதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றன. பாடசாலைகளின் சுற்றுப்புறங்களிலும் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது. இதன் காரணமாக பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்று வருவதில் நெருக்கடி காணப்படுகின்றது.

பாடசாலைகளில் தேங்கி நிற்கின்ற வெள்ளத்தை அகற்றுவதற்காக தொடர்ச்சியாகப் பெற்றோர்கள் முயற்சிக்கின்றபோதும் தாழ்நிலங்களில் நிரம்பியுள்ள வெள்ளத்தை அகற்றுவதில் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். பாடசாலைச்சூழலில் வெள்ளம் சூழ்ந்திருப்பதால் மாணவர்களுக்கு தொற்றுநோய்கள் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது என்று பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-ரி2)

# லிமோனைட் மணல் அகழ்வுக்கு ஆய்வுகள் மையம் அதிருப்தி

மன்னார், ஜன.20

மன்னார் வளைகுடாவில் லிமோனைட் மணல் அகழ்வை மேற்கொள்ள ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சுரங்க நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கியமை தொடர்பில் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம் அதிருப்தி வெளியிட்டுள்ளது. இந்தத் திட்டம் மன்னார், அதன் கடல் தேசிய பூங்கா மற்றும் அதன் வளமான பல்லுயிர் பெருக்கத்துக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தும் என்று சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய நிறுவனத்தின் சுரங்கத் திட்டம் மன்னார் தீவில் நிலத்தடி நீர் அட்டவணைக்கு சேதத்தை ஏற்படுத்தும். இதன் விளைவாக உப்பு நீர், குடிதண்ணீரை மாசுபடுத்தும் அபாயம் ஏற்படும். அதேநேரம் இறுதியில் மீன்பிடி மற்றும் பிற முதன்மைத் தொழில்களைச் சார்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான குடியிருப்பாளர்களின் வாழ்க்கையை சீர்குலைக்கும் என்றும் இயற்கை ஆய்வுகள் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ப)

# மின் கட்டணம் செலுத்த ஆறு மாத சலுகை

கொழும்பு, ஜன.20

இலங்கையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்போரின் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு 6 மாத கால சலுகை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இதன்படி, தொடர்ந்து 14 நாள்களுக்கு மேலாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்போருக்கே இந்தச் சலுகை வழங் கப்பட்டுள்ளது எனவும், இந்தக் காலப்பகுதி வரையில், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்போருக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

## உதவி வழங்கல்



வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. ஜேர்மன், சுர்காட் சித்தி விநாயகர் ஆலய அறக்கட்டளையின் ஏற்பாட்டில் சமூகசெயற்பாட்டாளர் தனுபனால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)



## 16 கிராமங்களுக்கு பழ மரக்கன்றுகள்

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பங்களுக்கான பழமரக்கன்றுகள் விநியோக ஆரம்ப நிகழ்வு பிரதேச செயலாளர் பிருந்தாகரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ், மனைப்பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கண்டாவளை பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ராஜவிநோத் மற்றும் கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ப)

## கிழக்கு பல்கலை விடுதியில் கொரோனாத் தொற்றாளர்

### நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்கள் கோரிக்கை

திருகோணமலை, ஜன.20

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் அடையாளம் காணப்பட்ட 3 கொரோனாத் தொற்று நோயாளிகளில் ஒருவர் பல்கலை விடுதியிலே தங்கி இருக்கிறார் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட மூவரில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக அழைத்து செல்லப்பட்டுள்ளபோதும், மற்றொருவர் இரண்டு நாள்களாக தொடர்ந்தும் விடுதியில் தங்கி உள்ளார்.

அனைத்து மாணவர்களும் பொது மலசலகூடங்களைப் பயன்படுத்துவதுடன், உணவு உண்ணும் அறையில் ஒன்றுகூடுகின்றோம். இந்த நிலையில் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள போராடி வருகின்றோம் என மாணவர்கள் விசனம் தெரிவித்தனர்.

மேலும், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தமது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந-இ)



## மின்விளக்கு பொருத்தும் பணி முன்னெடுப்பு

வவுனியா,ஜன.20

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டின் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் பாலமோட்டை, அரசமுறிப்பு, பன்றிக்கெய்தகுளம் உள்ளடக்கிய கிராமங்களிலுள்ள வீதிகளுக்கு சபை உறுப்பினர் அஞ்சலா கோகிலகுமாரியின் ஏற்பாட்டில் 65 மின்விளக்குகள் பொருத்தப்பட்டன. (ஜ-110)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி,ஜன.20

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 103 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திர மேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியவை இணைந்து இந்த உதவிகளை வழங்கின. (ஜ-222)

## தேசிய உரிமங்களை பெயரிட நிபுணர் குழு

கொழும்பு, ஜன.20

நாட்டின் தேசிய உரிமங்களை பெயரிடுவதற்கு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினூடாக தொல்பொருள் இடங்கள் மற்றும் இயற்கை வளங்கள் உள்ளிட்ட மரபுரிமைகள், தேசிய உரிமங்களாக பெயரிடப்படவுள்ளன.

தேசிய உரிமங்களை பெயரிடும்போது அவற்றின் பாதுகாப்பு தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தவும் எதிர்பார்த்துள்ளோம் என கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள், மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். (ந-இ)

## வாகனத் தரிப்பிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

கோண்டாவிலில் அமைந்துள்ள நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு வாகனத் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சிய (லண்டன்) குமரன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையோடு லண்டன் வாழ் நல்லையா பாஸ்கரனால் அவரது தாயார் அமரர் திருமதி நல்லையா பரிபூரணத்தின் நினைவாக வாகனத் தரிப்பிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வாகனத் தரிப்பிடம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி. ஆ.கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி அ. ஜெயக்குமாரன், ஓய்வு நிலை அதிபர் கணிதச்சுடர் சண். வாமதேவன் ஆகியோரும், ஜே,119, 120 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ப-222)




## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி,ஜன.20

மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. இதன்போது நடப்பு வருட நிர்வாகிகளாக தலைவர் வி.சிறிதரன், உப தலைவர். நா.சரவணமுத்து, செயலாளர் வ.வறக்ஸன், உதவிச் செயலாளர். செ.சிரஞ்சீவி, பொருளாளர்.ஆ. யோகேஸ்வரராஜ் இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.ஜெயராஜ், ந.சாருஜன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஜ-9)

# ஆஸியில் கொடியேற்றியது இந்தியா

## பிரிஸ்பெய்னில் ஆஸ்திரேலியாவின் 32 வருட வெற்றிப்பயணம் முடிவு



**பிரிஸ்பெய்ன், ஜன. 20**

**ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பிரிஸ்பெய்னில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி இமாலய வெற்றி பெற்றது.**

டெஸ்ட் ஆட்டங்களுக்கு இலக்கணம் சொல்லும் வகையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இறுதிவரை போராடி இந்த வெற்றியை இந்தியா தனதாக்கியது. இந்த வெற்றியின் மூலம் 2:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தையும் வென்றது.

கடந்த 15ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லபுஸ்சேன் 108 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நடராஜன், சுந்தர், தாகூர் மூவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 336 ஓட்டங்களைப் பெற்றது. தாக்கூர் 67 ஓட்டங்களையும், வொஷிங்டன் சுந்தர் 62 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹேசில்வூட் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

33 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 294 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சிமித் 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஸ்ராக் 5 இலக்குகளையும், தாக்கூர் 4 இலக்குகளையும், சுந்தர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்திய அணிக்கு 328 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்திய அணி இலக்குச் சரிவில்லாமல் 4 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவுக்கு வந்தது. இறுதிநாளான நேற்று, ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற வேண்டுமாயின் இந்திய அணியின் அனைத்து இலக்குகளையும் வீழ்த்த வேண்டும் என்ற நிலையும், இந்திய அணி வெற்றிபெற வேண்டுமாயின் மேலதிகமாக 324 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலையிலும் இரண்டு அணிகளும் களமிறங்கின. 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் ரோகித். ஆனால் அதன் பின்னர்தான் ஆஸ்திரேலியாவுக்குச் சோதனை ஆரம்பமானது. புஜாரா மிக நுட்பமாக இன்னிங்ஸைக் கட்டமைத்தார். மறுமுனையில் கில் சராசரியைச் சரியாதவாறு ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தார். முதல் 80 பந்துகளில் புஜாரா 9 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.



பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைக் கடந்தது இந்திய அணி. அணி 132 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 91 ஓட்டங்களுடன் கில் ஆட்டமிழந்தார். அணித்தலைவர் ரகானே ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் 24 ஓட்டங்களைப் பெற்றார். அவர் கம்மின்ஸின் பந்துவீச்சில் இலக்குக் காப்பாளருக்கு மேலாக பந்தைத் தூக்கிவிட எத்தனித்தபோது பெய்னிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அரைச்சதம் கடந்தார் புஜாரா - பன்ட்  புஜாரா இணை இந்திய அணியை மேலும் வலுப்படுத்தியது. 56 ஓட்டங்களுடன் புஜாரா ஆட்டமிழந்த போதிலும் இறுதிக்கட்டத்தில் பன்ட் அதிரடி, நிதானம் எனக் கலந்து காட்டினார்.

நாள் முடிவடைய 10 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்தன. ஆஸியின் வெற்றிக்கு 5 இலக்குகள் சரிக்க வேண்டும், இந்திய அணியின் வெற்றிக்கு 55 ஓட்டங்கள் பெறவேண்டும் என்ற நிலை. 22 ஓட்டங்களை 29 பந்துகளில் சேர்த்துப் பலம் காட்டினார் சுந்தர். 3 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருக்கையில் பவுண்டரியுடன் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் பன்ட். பந்துவீச்சில் கம்மின்ஸ் 4 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும், ஹேசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பன்ட், தொடராட்ட நாயகனாக கம்மின்ஸ் ஆகியோர் தெரிவாகினர். (ம)



## சொன்னது என்னாச்சு!

பிரிஸ்பெய்ன், ஜன. 20

ஆஸ்திரேலிய அணியின் நேற்றைய தோல்வியை அடுத்து அந்த அணியின் தலைவரான ரிம் பெய்ன் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பரிஸ்பெய்ன் கப்பா மைதானத்தில் கடந்த 32 வருடங்களாக ஆஸ்திரேலிய அணி தோல்வியையே சந்திக்கவில்லை. மூன்றாவது ஆட்டத்தின்போது ரிம் பெய்ன் அஸ்வினிடம் 'பிரிஸ்பெய்னின் கப்பா மைதானத்தில் உங்களைச் சந்திக்க ஆர்வமாய் இருக்கின்றேன்' என்று சீண்டியிருந்தார். இதற்கு அஸ்வினும் 'இந்தியாவில் அடுத்த தடவை நடைபெறும் டெஸ்ட் தொடர்தான் உங்களின் இறுதித் தொடராக இருக்கும்' என்று பதிலடி கொடுத்திருந்தார்.

கப்பா மைதானத்தில் நேற்று ஆஸ்திரேலியாவை வீழ்த்தி வரலாற்றைப் பதிவுசெய்தது இந்திய அணி. இதுபோதாதா? பெய்ன்தான் தற்போது நெட்டிசன்களின் பொழுதுபோக்கு. (ம)

## பங்களாதேஷ் – தீவுகள் ஒருநாள் தொடர் இன்று!

டாக்கா, ஜன. 20

பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறுகின்றது.


மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது. டாக்காவில் இலங்கை நேரப்படி காலை 11 மணியளவில் இந்த ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது.

காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக அணியை விட்டு விலகியிருந்த சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் மிண்டும் அணியுடன் இணைந்துள்ளார். அவரின் பெறுபேறு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது.

தொடரின் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 22ஆம் திகதியும் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 25ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (ம)

## கலக்கும் மீம்ஸ்கள்!







பிரிஸ்பெய்ன். ஜன. 20

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணி நேற்றுப் பெற்ற வெற்றியை அடுத்து ஏகப்பட்ட மீம்ஸ்கள் இணையத்தளங்களில் உலாவர ஆரம்பித்துள்ளன. அவற்றில் இரு மீம்ஸ்கள் இவை. (ம)

# முழுமை பெறாத வீட்டுத் திட்டம்; சிரமங்களின் மத்தியில் வாழ்க்கை

## கண்டாவளை மக்கள் கவலை

**கிளிநொச்சி, ஜன.20**

**கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை கிராமத்தில் 2019ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்படாத காரணத்தால் நாம் சிரமங்களை எதிர்கொள்கிறோம் என்று, வீட்டுத் திட்டம் கிடைக்கப்பெற்றும், தற்காலிக வீடுகளில் தங்கியுள்ள மக்கள் கவலை தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அந்த மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த அரசின் காலத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வீடமைப்புத்திட்டம் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னும் முழுமைப்படுத்தப்படவில்லை. இதனால் எமது கிராமத்தில் 13 குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலேயே வசிக்கின்றோம். மழை காலங்களில் மிகவும் சிரமத்தை எதிர்கொள்கின்றோம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.

ஆரம்பகட்டமாக 40 பைக்கற்றுகள் சிமெந்தும், 29 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டன. இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் இன்றுவரை மிகுதிப் பணம் வழங்கப்படவில்லை. இதனால் வீட்டுத்திட்டம் முழுமைப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலரின் கவனத்துக்கு கொண்டுவந்த போது கடந்தகால அரசால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர். எனவே மீள்குடியேற்றப்பட்டு 10 வருடங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையிலும், தற்காலிக வீடுகளில் மழைகாலங்களில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழும் எமக்கு சம்பந்தப்பட்டவர்கள் நிரந்தர வீடுகளைப் பூர்த்திசெய்துதர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ப-ரி1)

# கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜன.20

மாற்றுத்திறனாளிகளை சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் நோக்கில் துணுக்காய் பிரதேசத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

மாவட்டச் செயலக மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் அனிச்சயன்குளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது சிறப்புத் தேவையுடையோர் மேற்கொள்ளும் வாழ்வாதார நடவடிக்கைகளின் தற்போதைய நிலை, எதிர்கால மேம்படுத்தல் விடயங்கள், சுய சக்தி கடன்திட்டம் மற்றும் குறித்த பகுதியில் சமூக சேவைகள் திணைக்களம் ஊடக அமைப்பொன்றை அமைத்து வலுப்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ஐ-222)

# தே.அ. அட்டைகளைக் காட்டி இரணைதீவில் தொழில் புரியலாம்

## கிளி.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.20

இரணைதீவு கடற்றொழிலார்கள் அவர்களது தேசிய அடையாள அட்டைகளைக் காண்பித்து கடற்றொழில் செய்யமுடியும் என கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைதீவு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இரணைதீவு மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இரணைதீவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம். குறிப்பாக பாடசாலை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்பிலும், கடல் போக்குவரத்து தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது - என்றார். (ப-6)

# திடீர் கண்காணிப்புக்குள் வர்த்தக நிலையங்கள்

சாவகச்சேரி, ஜன.20

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கை கழுவும் வசதி செய்யப்பட்டிருப்பதுடன், கை கழுவும் திரவம் வாசலில் வைத்திருக்க வேண்டும் என்று பொலிஸார் வர்த்தகர்களுக்கு அறிவித்து வருகின்றனர்.

பொதுச் சந்தைகள் மூடப்பட்டு மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதை அடுத்து, பொலிஸார் கண்காணிப்புக்களை மேற்கொண்டனர். அதனை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. சந்தைக்கு வெளியே காணப்படும் வர்த்தக நிலையங்களுக்கு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-9)

# ரூ.52,500 தண்டம்

சாவகச்சேரி,ஜன.20

மதுபோதையில் காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப்பத்திரம் ஆகியவையின்றி, வாகனம் செலுத்திய நபருக்கு, 52 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வாகனத்தைச் செலுத்தியவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

# மன். மாவட்டத்தில் இதுவரை 84 தொற்றாளர்கள்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார்,ஜன. 20

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 84 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் கொரோனா நிலைமை தொடர்பான சிறப்புக் கூட்டம் நேற்றுக்காலை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் இது வரைக்கும் 6 ஆயிரத்து 938 பி.சி. ஆர் .பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. இதில் 84 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் இந்த ஜனவரி மாதம் 54 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து எதிர்வரும் நாள்களில் இறுக்கமான சட்ட நடவடிக்கையோடு மக்களுக்கான விழிப்புணர்வுகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மன்னாரில் வர்த்தக நிறுவனங்களை சார்ந்தவர்களே கொரோனாத் தொற்றுக்குள்ளாகினர். தற்போது மன்னாரில் 10 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. என்றார். (ஐ-213)



# குளவிகள் தாக்கி இருவர் காயம்

கிளிநொச்சி, ஜன.20

குளவிக் கொட்டுக்கு இலக்கான இருவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி முட்கொம்பனின் யட்டன் கிராமத்தில் இடம்பெற்றது.

வீட்டின் மரமொன்றில் இருந்த பம்பரக் குளவிக் கூட்டிலிருந்து கலைந்த குளவிகளே அங்கிருந்த இருவரையும் தாக்கின என்று தெரிவிக்கப்பட்டது. இதில் 65 வயதுடைய வயோதிப் பெண்ணொருவரும் 26வயதுடைய இளைஞரொருவரும் காயமடைந்தனர். (ப-ரி1)

# கொடிகாமத்தில் இறங்கும் பயணிகளுக்கும் பி.சி.ஆர்.

சாவகச்சேரி,ஜன. 20

கொழும்பிலிருந்து பயணித்து கொடிகாமத்தில் இறங்கும் பயணிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள மேற்கொள்வது தொடர்பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொலிஸார் இணைந்து எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து ஏற்கனவே பயணிகளிடையே பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பிலிருந்து பயணிகள் ரயிலில் வருகின்றனர் எனக் கிடைத்த தகவல்களையடுத்து ரயில் நிலையத்தில் பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பாக கொடிகாமம் ரயில் நிலைய பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடப்பட்டது.

விரைவில் ரயில் நிலையத்தில் பி.சி.ஆர்.பரிசோதனைகள் நடத்தப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் மேலும் தெரிவித்தனர். (ஐ-9)

## ஜனாஸா விவகாரம்:
# அரசின் நிலைப்பாடு சுகாதார வழிகாட்டுதலுக்கு எதிரானது!

*மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.20

கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழக்கும் அனைவரினது சடலங்களையும் தகனம் செய்யவேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு, பொதுச் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு எதிரானது எனவும், முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான பாகுபாட்டை அது உருவாக்குகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது,

இஸ்லாமிய பாரம்பரியதுக்கு ஏற்ப சடலங்களை அடக்கம் செய்வது பொதுச் சுகாதார ஆபத்தை ஏற்படுத்துகின்றது என்ற அரசாங்கத்தின் போலியான கருத்து, சிறுபான்மை மக்களுக்கு பெரும் களங்கத்தையும் மனக்கவலையையும் அடக்குமுறையையும் ஏற்படுத்துகின்றது. சடலங்களை பலவந்தமாக ராஜபக்ச அரசாங்கம் அகற்றுவது மத உரிமைகள் மற்றும் அடிப்படைக் கௌரவத்தின் மீதான மூர்க்கத்தனமான தாக்குதலாகும். இந்தக் கொள்கை, சகிப்புத்தன்மையின்மை மற்றும் சமூகத்துக்குள் பிரிவு உருவாகுவதற்கே வழி வகுக்கின்றது.

முஸ்லிம் மக்கள் தங்கள் மதத்தை சேர்ந்தவர்களை அடக்கம் செய்வதற்கான உரிமையை மறுப்பது கடுமையான துன்பத்தையும் இனவாத வெறுப்பையும் தூண்டுகின்றது - என்றார். (ற-இ)

# நிலத் தொடர்பை துண்டாடும் முயற்சியை உடைத்தெறிவோம்

*சிறிகாந்தா அழைப்பு*



**யாழ்ப்பாணம், ஜன. 20**

**தமிழ் இனத்தின் மரபுவழித் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான நில இணைப்பின் தொடர்ச்சியை, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடுருவி உடைப்பதன் மூலம் சிதைக்க முனையும் பேரினவாத அரசியல் சதித் திட்டத்தை நாம் முறியடிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலையில், பௌத்த விகாரையின் சிதைவுகளும் சிதிலங்களும் காணப்படுகின்றன என்ற கண்டுபிடிப்பு ஒன்றின் பேரில் அங்கிருந்த இந்து ஆலயத்தின் ஐயனார் சூலத்தை அகற்றி விட்டு, புத்தரின் சிலை ஒன்றை நிறுவி, தொல்லியல் திணைக்களம் ஆரம்பித்திருக்கும் அகழ்வு ஆராய்ச்சி நடவடிக்கைகள், தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமாக அங்கீகரிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வரும் பௌத்த சிங்கள நில ஆதிக்க விஸ்தரிப்பு நிகழ்ச்சி நிரலின் இன்னுமோர் அம்சம் என்பது தெட்டத் தெளிவானது.

இராஜாங்க அமைச்சர் ஒருவர் கொழும்பிலிருந்து வந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியில் பௌத்த மத அனுட்டானங்களோடு ஆரவாரமாக ஆரம்பித்து வைத்துள்ள இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை, அரசின் அதிகார அடாவடித்தனத்தின் அப்பட்டமான வெளிப்பாடு என்பதற்கு அப்பால், தமிழ் இனத்தின் மரபு வழித் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான நிலஇணைப்பின் தொடர்ச்சியை, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடுருவி உடைப்பதன் மூலம் சிதைக்க முனையும் பேரினவாத அரசியல் சதித் திட்டத்தின் சமீபத்திய அதிரடி என்பதும் அப்பட்டமானதாகும்.

தமிழர்களின் மரபு வழி மண்ணில், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வரும் பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக, தமிழ் இனத்தின் மத்தியில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் சமூக நடவடிக்கையாளர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பை கொண்டிருக்கின்றார்கள். ஒன்றுபட்டதும், ஒருங்கிணைக்கப்பட்டதும், தொடர்ச்சியானதுமான எதிர்ப்பு எமது மக்கள் மத்தியிலிருந்து எழ முடியுமானால், இந்த இனவெறித் திட்டத்தை நிச்சயம் தோற்கடிக்க முடியும். எம் இன, மத உரிமைகள் சம்பந்தப்பட்ட உணர்வுபூர்வமான இந்த விவகாரத்தில், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட, அரச சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிலரில், எவரும் மௌனம் காக்கக் கூடாது, இல்லையேல் அந்த மௌனம் சம்மதமாகவே அர்த்தப்படும், என்றுள்ளது. (ஒ-26)

# 3 வயதுச் சிறுவனுக்கு கொரோனாத் தொற்று

ஹற்றன், ஜன. 20

டிக்கோயா வனராஜா கீழ் பிரிவில் மூன்று வயதுச் சிறுவனுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என மஸ்கெலியா சுகாதார வைத்திய தலைமை மருத்துவர் டி.சந்திரராஜன் தெரிவித்தார்.

குறித்த சிறுவனுக்கு 17 ஆம் திகதி சுகயீனம் ஏற்பட்டதையடுத்து தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவனுக்கு உடனடியாக மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு தொற்று இருப்பது உறுதியானது.

இதனால் வனராஜா கீழ் பிரிவில் உள்ள 9 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மருத்துவர் டி.சந்திரராஜன் தெரிவித்தார். (ரி5)

# மேன்முறையீட்டுக்கு கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 20

கடந்த ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய பாடசாலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் தொடர்பான மேன்முறையீடுகளுக்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்தது.

குறித்த மேன்முறையீடுகளை எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் மார்ச் 14 வரையான காலப்பகுதிக்குள் இணையம் மூலம் சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ரி5)

# கும்பாபிகேஷம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 20

கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறும்.

ஆலயத்தில் காலை விநாயகருக்கு 108 சங்காபிஷேகமும் அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூசையும் இடம் பெறும்.

மாலை 5 மணிக்கு பூசையைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்று அம்பாள் பூந்தண்டிகையில் உள்வீதி மற்றும் வெளிவீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5-222)

# போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலன்களில் அரசுக்கு அக்கறை இல்லை

*வலி.கிழக்கு தவிசாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணியற்ற நிலையில் இருக்கும் போது, அரசு தனியாருக்குச் சொந்தமான காணிகளையே இராணுவத்துக்கெனச் சுவீகரிக்க முயற்சிக்கின்றமை போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நலன்களில் அரசுக்கு அக்கறை எதுவும் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது என்று ரெலோ அமைப்பின் யாழ் மாவட்டப் பொறுப்பாளரும், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். தீவகத்தில் நில அபகரிப்புக்கு எதிராக நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தீவகத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்துக்கெனச் சுவீகரிப்பதற்காக நேற்று (நேற்றுமுன்தினம்) வந்த அதிகாரிகள் மக்களின் எதிர்ப்பையடுத்துத் திரும்பினர். இன்று (நேற்று) மண்கும்பானில் பொதுமக்களின் காணிகளை அபகரிப்பதற்கு அதிகாரிகள் வருவார்கள் என்று அவர்களை அளவீடு செய்யவிடாது திருப்பி அனுப்புவதற்காகவும் காத்திருந்தோம். பின்னர் வேலணை பிரதேச செயலகம் முன்னும் போராட்டம் நடத்தியுள்ளோம். பிரதேச செயலர் பொது மக்களின் எதிர்ப்பை காணி அமைச்சுக்குத் தெரியப்படுத்தி அமைச்சின் அறிவுறுத்தல் பெறும் வரையில் காணிகளைச் சுவீகரிக்க மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதென உத்தரவாதம் அளித்துள்ளமையால் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எமது மண்ணில் எமக்குச் சொந்தமான பிரதேசத்தில் வளமான காணிகளை இராணுவத்தினர் போரின் போது கையகப்படுத்திவிட்டு இன்று அவற்றை சட்ட ரீதியிலான நிரந்தர உடமையாக மாற்றுவதற்கு வலோற்காரம் பிரயோகிக்கப்படுகின்றது - என்றார். (ப)

# 297 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 20

குவைத்துக்கு தொழில் புரியச் சென்று நாடு திரும்ப முடியாமல் சிக்கியிருந்த, 297 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (ரி5)

## யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின்

# சேவைநலன் பாராட்டு

## திருமதி தனலட்சுமி தவராஜா

(பதில் உதவி அதிபர்)

B.A (Hons), Dip in Edu.,M.Ed.

Congratulations!

Congratulations!



**சேவை விவரம்:**

| | |
|---|---|
| ◆ ஆசிரியர் முன் பயிற்சி | - 26.12.1985 -16.07.1986 |
| ◆ கிளி / பளை றோ.க.த.க.பாடசாலை | - 26.12.1986 - 01.03.1990 |
| ◆ கிளி / இயக்கச்சி அ.த.க பாடசாலை | - 02.03.1990 - 17.06.1990 |
| ◆ யா/ புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி | -18.06.1990 - 30.09.1996 |
| ◆ யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | - 01.10.1996 - 26.01.2014 |
| ◆ யா/ இள்வாலை சென்ஹென்றியரசர் கல்லூரி | - 27.01.2014 - 23.02.2014 |
| ◆ யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | - 24.02.2014 - 19.01.2021 (ஆசிரியர், பகுதித்தலைவர், பதில் உதவி அதிபர்) |

Congratulations

ஸ்கந்தா அன்னையின் கல்விக் கூடத்தில்
இருபத்தைந்து ஆண்டுகள் கல்விப் பணி செய்தீர்
ஆசிரியராய், பகுதித்தலைவராய், உதவி அதிபராய்
பதவிகள் பல பெற்று அரும்பணி ஆற்றினீர்

வரலாற்றுப் பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்து
வரலாற்றில் சாதனை படைத்திட்டீர்
அன்புடன் கூடிய அறிவுரை வழங்கி
மாணவர் உள்ளத்தில் என்றும் நிறைந்திட்டீர்

தன்னம்பிக்கை மிகுந்த மனிதராய்த் திகழ்ந்து
தன்னம்பிக்கை தன்னை மாணவர்க்குக் கொடுத்தீர்
நிர்வாக நுட்பமும் நன்கு தெரிந்து
நிறைவுடன் நற்பணி செய்தீர்

ஆசிரியரோடு அன்பாய்ப் பழகும்
இனிய பண்பினை நன்கு பெற்றீர்
உதவி என்று கேட்பவர்க்கு எல்லாம்
உள்ளம் உவந்து இனிதே செய்தீர்


ஸ்கந்தா அன்னைக்கு ஆற்றிய பணியினை
வாழ்க வளமுடன் என்று வாழ்த்துவோம்
மணிவிழா நாயகியின் ஓய்வுக்காலம்
இனிதே அமைந்திட இறைவனை
வணங்குகின்றோம்.

**வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், நலன்புரிக்கழகம்**

**யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.**

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 21.12.2020 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் கதிரித்தம்பி வீரசிங்கம்**

(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் - இலங்கைப் பொலிஸ்)

அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொழுது நெருக்கடிமிக்க கொரோனா காலத்திலும் அவரது நலனில் அக்கறை கொண்டு வைத்தியசாலையை தேடி ஓடி வந்த உறவுகள், தொலைபேசி வாயிலாக அவர் நலம் விசாரித்த உறவுகள், அவர் மீண்டு வரவேண்டும் எனும் நம்பிக்கையை அல்லது விருப்பை எமக்கு ஈடாகச் சுமந்து அவருக்கு வைத்தியப் பணியாற்றிய வைத்தியர்கள், மருத்துவ தாதிமார்கள், எங்களின் கைகளில் எதுவும் இல்லை என அவர் இயற்கையுடன் ஒன்றித்த போது அவரது புகழுடலை உரிய சட்ட விதிமுறைகளுக்கு இணங்க விரைவாக வீடு கொண்டுவர உதவிய பொலிஸ் உத்தியோகத்தர்கள், மரண விசாரணை உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், எங்கள் இல்லம் தேடிவந்து ஆறுதல் சொன்ன உற்றார் உறவினர்கள், நண்பர்கள், உயர் அதிகாரிகள், அலுவலக நண்பர்கள், ஆசிரிய நண்பர்கள், பத்திரிகை விளம்பரம் மூலமாகவும் பதாதைகள் மூலமாகவும் மலர் வளையங்கள் மூலமாகவும் தங்கள் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்ட உறவினர்கள், நண்பர்கள், இறுதிக்கிரியைகளை முன்னின்று நடத்திய சிவாச்சாரியப் பெருமக்கள், பறையொலி முழங்க அவர் உடலை காவிச் செல்ல உதவிய பறையிசைக் கலைஞர்கள், எங்கள் வீட்டிலிருந்து சுடுகாடுவரை பொலீஸ் அணிவகுப்பு மரியாதையை வழங்கியதுடன் சுடுகாட்டிலும் அவருக்கான அரச மரியாதையை வழங்கிய இலங்கை பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள், பட்டினிப் பண்டம் தந்து தமிழர் பண்பாட்டை காத்த உறவுகள் அனைவர் கரங்களையும் எங்கள் குடும்பத்தின் சார்பில் இறுகப் பற்றி நன்றி பகர்கின்றோம்.

**குறிப்பு:** **கோவிட் - 19** நெருக்கடியினால் உறவுகள் அனைவரையும் நேரே தேடிவந்து இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாத இக்கட்டால் மனம்வருந்துகின்றோம். தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இன்று எங்கள் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வண்ணம் தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

**அமரர் கதிரித்தம்பி வீரசிங்கம் அவர்களின்**
**வேர்களும் விழுதுகளும்**

---

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
01 . 01 . 1950



மறைவு
19 . 12 . 2020

கடந்த 19.12.2020 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் திருமதி**

## விஸ்வலிங்கம் செல்வராணி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று(20.01.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

**"ஸ்ரீரங்கம்"**
**குரும்பசிட்டி வீதி, கட்டுவன்,**
**தெல்லிப்பழை.**

**குடும்பத்தினர்**

## சிறுநீரகம் தேவை

35 வயதுடைய ஆண் ஒருவருக்கு B/O குரூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்புகளுக்கு: 076 057 4484

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வீட்டு
வேலைகள் செய்வதற்கு
35 - 50 வயதுக்கு உட்பட்ட வீட்டுப்
பணிப்பெண் தேவை.

**077 991 5075**

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 08 . 1941 — இறப்பு 19 . 01 . 2021

**திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்**

யாழ் சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும், வவுனியா உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (19.01.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், இராமநாதன், சுபாசினி, சிவாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாதேவி, சுபாஸ்கரன், குமாரதாஸ் . ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கௌசிகா . டனுசன், திவ்யன், நிலுக்சிகா, லகிரா, மதுஷன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2021) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

024 205 0712
004917622016467 (மகன்)

தகவல்: குடும்பத்தினர்

## பதவி வெற்றிடம்

**வடக்கு மாகாண சபையில் நிலவும் பொறியியலாளர் (குடிசார) ஆளணி வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2021**

**01. வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 09**

**02. தகைமைகள்**

i. **பொதுவான தகைமை**
விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

ii. **கல்வித்தகைமை**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் (குடிசார்) இளமானிப்பட்டம் (B.Sc Engineering in Civil)

**அத்துடன்**

iii. இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை சம்பந்தமான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெற்றுள்ளமை பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந் நிறுவனத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழில்சார் அனுபவம்**
குறித்த துறையிலான அனுபவம் மேலதிகமான தகைமையாகக் கருதப்படும்.

03. **வயது :**
விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 21 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04. **சம்பள அளவுத்திட்டம்:**
மாதாந்த சம்பளம் ரூபா 62,500.00 ஆகும்.

05. **ஆட்சேர்ப்புமுறை:**
கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்புள்ளிவரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரி தனது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 02.02.2021ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**சி.திருவாகரன்
செயலாளர்,மாகாண பொதுச்சேவை
ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
20.01.2021**

## தேவை

முன் அனுபவம் உள்ள சமயலாளர் (CHEF)
Gnanams Hotel
076 222 0632, 021 222 0631

**Software, Web Development
Project Training
076 300 5506**

## தேவை

எமது தொழிற்சாலைக்கு அனுபவம் உடைய
Welding Motor Pumpfitting
திருத்துனர் தேவை.
வயது - 25 - 45
சம்பளம் பேசித் தீர்மானிகப்படும்
077 130 0190

## வேலை ஆட்கள் தேவை

கோழிப்பண்ணை மற்றும் கோழி இறைச்சிக் கடைகளில் வேலை செய்யக் கூடிய மோட்டார் சைக்கிள் ஓடக் கூடிய 4 ஆண்கள் தேவை. சமையல் செய்வதற்கும் கணக்கு செய்வதற்கும் பண்ணையில் வேலை செய்வதற்கும் 2 பெண்கள் தேவை.

**தொடர்பு:077 271 8149
Viber:0041779243687**

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான
மணமக்கள் ஜாதகங்கள்
உடன் தரப்படும்.

**இல.5, ஐந்தாம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.**

021 222 9306, 077 138 7596

# கொரோனாச் சாவு 273ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 20
இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் மூவர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.
இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 273ஆக அதிகரித்துள்ளது. இறுதியாகப் பதிவான 3 உயிரிழப்புகளில் இரண்டு பெண்களும், ஓர் ஆணும் அடங்குகின்றனர்.
கேகாலை அரநாயக்க பகுதியைச் சேர்ந்த 68 வயதான ஆண் ஒருவர் மாவனெல்ல வைத்தியசாலையிலிருந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
கொழும்பு - 06, வெள்ளவத்தையைச் சேர்ந்த 48 வயதான பெண் ஒருவர் கொழும்பு தனியார் மருத்துவமனையில் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 17ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 70 வயதான பெண் ஒருவர், நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையில் கடந்த 14ஆம் திகதி உயிரிழந்துள்ளார். கொரோனாவால் இதுவரை 273 பேர் சாவடைந்துள்ள நிலையில், இவர்களில் 260 பேர் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## Walk in interview

ASTP
*Your Partner in IT Solution*
49, 1st Cross Street, Jaffna.

We ASTP Tec Pvt Ltd, operating in Northern province as a computer service provider for a last 25 Years.

**Walk in interview**

1.Hardware Technician-கணனி தொழினுட்பவியலாளர்

தகமைகள்

1. Minimum 1 year Experience in related field
2. Ability to work well with team members and independently
3. Minimum qualification is Diploma or NVQ level in computer hardware
4. Should have valid licence for riding bikes

Salary is negotiable

தகமை உடையோர் 23/01/2021 காலை 10மணிக்கு நேர்முகத் தேர்விற்காக நேரில் அழைக்கப்படுகின்றீர்கள்.
மேலதிக தகவலிற்கு அழையுங்கள்: 0212228147

# 54ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

*நேற்றும் 660 பேருக்குக் கொரோனா உறுதி*

கொழும்பு, ஜன. 20
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 54 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்று மட்டும் 660 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 410ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 46 ஆயிரத்து 594 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 543 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-22)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 29.04.1960 — ஆண்டவன் அடியில் 01.02.2020

**அமரர் சுப்பிரமணியவேல்
ஜெகதீஸ்வரி**

**(ஆசிரியை
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்)**

**திதி-தை மாத பூர்வபக்க ஷப்தமி**

அன்பாய் அரவணைத்து அறிவுரைகள் பல கூறி
குடும்பத்தை காத்திட தியாகங்கள் பல செய்தவளே அம்மா....
பணி ஓய்வுபெற்று உமக்கு பணிவிடைகள் நாம் செய்து
பலகதைகள் பேசிட காத்திருந்த வேளை அவசரமாய் எமைவிட்டு சென்றதேனோ
நீர் ஊட்டிய கல்வியால் உயர்ந்த உம் மாணாக்கரின் கேள்விக்கு
எம்மால் பதிலளிக்க முடியவில்லை யம்மா
நீ... செய்த சேவைகள் இன்றும் உன் பெயரை ஊரில் சொல்லி நிற்குதம்மா....
சிரித்த உன் முகமும், சிறுபிள்ளை உள்ளமும்
நிதமும் எம் நினைவில் வந்து வாட்டுதம்மா
வரவேற்று உபசரிக்கும் பண்பும், சேவை செய்யும் பண்பிலும்
உன்னை போல் பாரில் எவரும் இல்லையம்மா....
ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் யுகம் ஆயினும்
ஆறாதம்மா உன் இழப்பு
"அம்மா......, அம்மா ......, அம்மா.....
உங்கள் ஆத்துமா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**குறிப்பு: தற்போதய கொரோனா சூழ்நிலை காரணமாக வீட்டில் நிகழும் மதிய போசன நிகழ்விற்கு அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.**

**கைதடி மத்தி,
குமரநகர்.**


**என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
0772208245, 0774812791, 0773880535**


# ரஞ்சனின் தலைவிதி மூன்று வாரங்களில் நிர்ணயம்

கொழும்பு, ஜன. 20
நீதிமன்றத்தை அவமதித்ததான குற்றச்சாட்டில் குற்றவாளியாகச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சபை அமர்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்க முடியுமா அல்லது முடியாதா என்பது தொடர்பான தீர்மானத்தை மூன்று வார காலத்துக்குள் தான் அறிவிப்பேன் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேரவர்தன சபையில் நேற்று அறிவித்தார். (ம-22)











அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடன் இன்று பதவியேற்கவுள்ள நிலையில், அமெரிகத் தலைநகர் வொஷிங்டனில் உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகளும் கோலாகலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

### நிஷாந்தவுடன் நெருக்கமாக நின்ற

# கோத்தாவை ஏன் இன்னும் தனிமைப்படுத்தவில்லை?

### சபையில் சஜித் அணி கேள்வி

கொழும்பு, ஜன. 20

'இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமான தொடர்பைப் பேணிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை ஏன் இன்னமும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை? இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகைலேயே அவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவும் டயர் தொழிற்சாலையொன்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டார். எனினும், இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியென்றால் ஜனாதிபதியைச் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது அவசியமில்லையா?

எமது ஆட்சிக் காலத்தில் விளையாட்டு டயர் நிறுவனம் ஒன்றை நாம் ஆரம்பித்துள்ளோம் என விமர்சித்தவர்கள்தான் தற்போது அதே டயர் நிறுவனத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர். எனவே, இப்போதைய அரசு எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் எம் மீது முன்வைத்த விமர்சனங்கள் அனைத்தும் பொய்யானவையாகும். நாட்டு மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்' என்றார்.

(ம-22)



## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 01 . 1949



உதிர்வு 18 . 01 . 2021

**திரு J.S.A. யேசுதாசன் (ஓய்வுபெற்ற தபாலதிபர்)**

யாழ் கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.J.S.A.யேசுதாசன் கடந்த (18.01.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேம்ஸ் சின்னராசா, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கொன்ஸ்ரன்ரைன், றெபேக்கா தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரியோசப்பின் யோகதேவி அவர்களின் அருமைக் கணவரும், அரியமலர் (கிளி), மேரி ஸ்ரெலா (றுபி- கனடா), அமலதாசன் (தனம்- லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்தானநாயகம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற டானியல் ஜெயநாயகம், பிலோமினா றஞ்சிதம் (புத்தளம்), காலஞ்சென்ற தவநாயகம் தேவநாயகம் (புத்தளம்) ஆகியோரின் மைத்துனரும், டான்சி, டயஸ் பற்றிக் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிம்சோனின் (Postoffice) மாமனாரும், சேனினா, ஸ்ரெபான் ஆகியாரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.01.2021 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்கலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

077 450 8003-Dias (மகன்)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 11.02.1942



ஆண்டவன் அடியில் 21.12.2020

**அமரர் கோபாலகிருஷ்ணன் நவமணி**

ஆயிரம் உறவுகள் வரலாம், போகலாம்

ஆனால், அம்மா எனும் உறவென்பது அழியாது நிலைத்திருக்கும்

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது இறுதிச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாலி சந்தி,
அல்வாய் தெற்கு.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

### பைடன்...

மாதம் இடம்பெற்றது. குடியரசுக் கட்சி
யின் சார்பில் டொனால்ட் ட்ரம்ப், ஜனநா
யகக் கட்சியின் சார்பில் ஜோ பைடன்
ஆகியோர் போட்டியிட்டனர். ஜோ பைடன்
பெரு வெற்றிபெற்றார். இதைத்
தொடர்ந்து அவர் இன்று அமெரிக்க
ஜனாதிபதியாகப் பதவியேற்கின்றார். (ம)

### இராணுவ....

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
பெரும் எண்ணிக்கையான ஓய்வுபெற்ற
இராணுவ அதிகாரிகள் இலங்கையில்
சிவில் சேவையில் பதவிகளைப் பொறுப்
பெடுத்து வருகின்றனர். முன்னாள் இரா
ணுவ அதிகாரியான ஜனாதிபதி கோத்தா
பய ராஜபக்சவாலேயே அண்மையில்
39 இராணுவ அதிகாரிகளுக்கு முக்கிய
அரச பதவிகள் வழங்கப்பட்டன.

இதைவிட ஜனாதிபதியின் கைகளை அதி
கார மயமாக்கல், உறவினர் ஆதரவுக்
கொள்கை, நண்பர்களுக்கு அதிகாரம்
வாய்ந்த பதவிகளை வழங்குதல் மற்றும்
நீதிமன்ற வழக்குகள் எதிராக அப்போ
தும் இருக்கையில் அதிர்ச்சியளிக்கும்
எண்ணிக்கையிலான ஆட்களை அரச
பதவிகளுக்கு நியமித்தல் போன்றனவும்
இடம்பெறுகின்றன. இது ஒரு
திருட்டுத்தனமான சதிக்கு ஒப்பானதா
கும். இலங்கையில் ஜனநாயகம் படிப்ப
டியாக அழிக்கப்பட்டு வருகின்றது.

விசுவாசமான இராணுவ அதிகாரிகள்
கொரோனாவுக்கான நடவடிக்கை,
பொலிஸ், புலனாய்வு சேவைகள், சிறை
கள், வெளிநாட்டுக் கொள்கை, விமான
நிலையங்கள், துறை முகங்கள், சுங்கம்,
அடிப்படைத் தேவைச் சேவைகள், விவ
சாயம், மீன்பிடி, நில அபிவிருத்தி, வனப்
பாதுகாப்பு மற்றும் இறுதியாக இலஞ்ச
ஆணைக்குழு ஆகியவற்றில் அதிகாரத்
தைச் செலுத்தி வருகின்றனர்.

இது முன்னொருபோதும் இல்லாத அரச
இயந்திர இராணுவமயமாக்கல் ஆகும்.
ஓய்வுபெற்ற மற்றும் பதவியில் இருக்கும்
இராணுவ அதிகாரிகள் நிர்வாகப் பதவி
கள், கட்சிப் பதவிகள் மற்றும் முக்கிய
அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுள்
ளார்கள். இது அரசின் சிவில் குணாம்ச
த்தின் முடிவைத் தீர்க்கமாகக் குறிக்கும்.
மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாட்
டின் பொதுமக்களுக்கு எதிரான பயங்கர
மான குற்றங்களைப் புரிந்ததாக இராணு
வத்தினர் மீது சரமாரியான
குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு
ள்ளன. அத்துடன் அவர்களை அரசியல்
மற்றும் நிர்வாகக் களங்களில் தமது அதி
காரத்தை வலுப்படுத்த அனுமதித்தல்
மீளமுடியாத ஒரு நிலைக்கு வழிவகுக்
கும்' என்றுள்ளது. (ம-22)

### மீண்டும்...

பெய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்
றது. எதிர்வரும் 28ஆம் திகதிக்கும்
8ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில்
வடக்கு மாகாணத்தில் பரவலாகக் கன
மழை பெய்யலாம் என்றும் எதிர்வுகூறப்
பட்டுள்ளது.

முற்கூட்டிய திட்டமிடல்கள் மூலம் இழப்
புக்களைக் கணிசமான அளவு குறைக்க
முடியும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்
கழக புவியியல்துறை விரிவுரையாளர்
நா.பிரதீபராஜா தெரிவித்தார். (எ-இ)

### காணி...

க்குட்பட்ட மண்கும்பாண் பிரதேசத்தில் 11
பேருக்குச் சொந்தமான 5 ஏக்கர்
காணியை கடற்படையினரின் தேவைக்
காகச் சுவீகரிக்கும் நோக்கில் நில
அளவை செய்யும் நடவடிக்கைகள் முன்
னெடுக்கப்பட்டிருந்தன.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காணி உரி
மையாளர்களும், பிரதேச மக்களும்,
அரசியல் கட்சி பிரதிநிதிகளும் நேற்றுப்
போராட்டம் நடத்தினர். ஆயினும் நேற்று
நில அளவை மேற்கொள்ள நில அள
வையாளர்கள் அங்கு வரவில்லை.

நேற்றுமுன்தினம் மண்டைதீவில் காணி
சுவீகரிப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டி
ருந்தது. மக்கள் எதிர்ப்பால் அது கைவி
டப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று
மண்கும்பானில் காணி சுவீகரிப்பு
முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளாந்தம் திடீர் திடீர் என மக்களுக்குச்
சொந்தமான காணிகளை படையினரின்
தேவைக்காக அபகரிக்கும் நோக்கில் நில
அளவைத் திணைக்களத்தால் நில அள
வீடு செய்வது நிறுத்தப்பட வேண்டும்,
படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பொது
மக்களின் காணிகளை மீண்டும் மக்களி
டமே வழங்க வேண்டும் என்று வலியுறுத்
தியும் நேற்று வேலணை பிரதேச செயல
கத்துக்கு மக்கள் பேரணியாகச் சென்ற
னர்.

அங்கு பெருமளவு பொலிஸார் குவிக்கப்
பட்டு, மக்கள் பிரதேச செயலகத்துக்குள்
செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது.
கவனவீர்ப்பின் இறுதியில் மக்களின்
கோரிக்கை அடங்கிய மனு வேலணை
பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.
மக்களுக்கு விருப்பமின்மை, மக்கள்
எதிர்ப்புத் தெரிவிப்பதால் காணி அள
வீட்டு நடவடிக்கைகள் தற்காலிகமாக
இடைநிறுத்தப்படுகின்றன என்றும்,
காணி அமைச்சுக்குத் தெரியப்படுத்திய
பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்
பாக தீர்மானிக்கப்படும் என்றும் பிரதேச
செயலாளர் சோதிநாதன் தெரிவித்தார்.
அதையடுத்து மக்கள் போராட்டம் முடி
வுக்குக் கொண்டுவரப்பட்டது. (எ20)

### பொலிஸாரின்...

26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலி
கள் அமைப்பின் தலைவர் வேலுப்
பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள்
அன்று, அவரது ஒளிப்படத்துடன் உத
யன் பத்திரிகையில் செய்தி வெளியாகியி
ருந்தது. இது தொடர்பில் டிசெம்பர் மாதம்
4ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸா
ரால் நீதிமன்றுக்கு வழக்குத் தாக்கல்
செய்யப்பட்டிருந்தது. ஒளிப்படம்
பிரசுரிக்கப்பட்டமை தொடர்பில் விசா
ரணை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்
பட்டிருந்தது. இந்த வழக்கு மார்ச் மாதம்
26ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் மீண்டும் டிசெம்பர்
7ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் சமர்ப்
பித்து வழக்கை எடுக்க பொலிஸார் கோரி
னர். இதன்போது தமது வழக்கு விசார
ணைக்கு வாக்குமூலம் வழங்க உதயன்
சார்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது
என்று நீதிமன்றில் குறிப்பிட்டனர்.
இதற்கு அமைவாக நீதிமன்றால், உத
யன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர்
ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் உத
யன் பத்திரிகையின் ஆசிரியபீடத்தைச்
சேர்ந்த கு.டிலீப்அமுதன் ஆகியோரை
மன்றில் நேற்றைய தினம் முன்னிலை
யாகுமாறு அழைப்பு அனுப்பப்பட்டது.

மன்றில் மூத்த சட்டத்தரணி வி.
திருக்குமரனின் நெறிப்படுத்தலில், ம.
டெனிசியஸ், தி.கணாதீபன், த.திவாகர்,
எஸ்.ரிசிகேசன், பு.அபிதன் ஆகியோர்
முன்னிலையாகினர்.

வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதி
மன்ற நீதிபதி அ.பீற்றர்போல் முன்னி
லையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலை
வர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்
படம் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில்,
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தி
னரால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும்
வாக்குமூலம் வழங்குமாறு உதயன் பத்
திரிகையிடம் கோரப்படவில்லை என்றும்,
வேறொரு செய்தி தொடர்பில் வாக்கு
மூலம் வழங்க வருமாறு கோரப்பட்ட
தற்கு உதயன் பத்திரிகையின் சார்பில்
பதிலளிக்கப்பட்டது என்பதையும் சட்டத்த
ரணி வி.திருக்குமரன் எடுத்தியம்பினார்.
அத்துடன் ஈ.சரவணபவன், தான் மேற்
கொண்ட முறைப்பாடு தொடர்பில் வாக்
குமூலம் வழங்க பொலிஸ் நிலையம்
சென்ற சந்தர்ப்பத்தில், நீண்ட நேரம்
அவரைக் காக்க வைத்துவிட்டு, ஒளிப்ப
டம் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில்
கேட்கப்பட்டது. அதற்கும் அவர் மறுப்புத்
தெரிவிக்கவில்லை. செய்திகள் தொடர்
பில் ஆசிரியர்பீடத்துடன் தொடர்பு கொள்
ளுமாறு கூறினார் என்பதையும் மன்றில்
சட்டத்தரணி குறிப்பிட்டார்.

பொலிஸார் தமக்கு வேண்டிய யாரையோ
திருப்திப்படுத்த தமது விசுவாசத்தைக்
காண்பிக்க வன்மத்துடன், மன்றை
பிழையாக வழிநடத்தியுள்ளனர் என்று
சட்டத்தரணி எடுத்துரைத்தார். அத்துடன்
தமது கட்சிக்காரர்கள் வாக்குமூலம்
வழங்கத் தயாராக இருக்கின்றனர்
என்றும் தெரிவித்தனர்.

இதனையடுத்து இன்றைய தினம் காலை
9 மணியிலிருந்து 12 மணிக்குள் யாழ்ப்
பாணம் பொலிஸ் நிலைய சிறுகுற்ற
த்தடுப்பு பிரிவில் வாக்குமூலத்தை வழங்
குமாறு நீதிவான் குறிப்பிட்டார்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகள்
அமைப்பின் தலைவர் பிரபாகரனின்
ஒளிப்படத்துடன் சிங்கள, ஆங்கில மற்
றும் வேறு தமிழ் ஊடகங்கள் செய்தி
களைப் பிரசுரித்துள்ள நிலையில், உத
யன் பத்திரிகை மீது வேண்டுமென்று,
தமது விசுவாசத்தை யாருக்கோ காட்டுவ
தற்கு பொலிஸார் இவ்வாறான வழக்
கைத் தாக்கல் செய்துள்ளனர் என்று
சட்டத்தரணி வி.திருக்குமரன் மன்றில்
எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு மார்ச்
மாதம் 19ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்
டது. (ஒ-5,26)

### யாழ்ப்பாணத்தின்.....

வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உத
வியுடன் இலங்கை மின்சார சபை நடை
முறைப்படுத்தும் மின்சார வழங்கல்
நம்பகத்தன்மை மேம்பாட்டு திட்டத்தின்
ஒரு பகுதியாகவே சீனாவுக்கு தீவுப்பகுதி
களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி
அமைப்பொன்றை உருவாக்குவதற்கு
அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவின் கூட்டுமுயற்சி நிறுவனமான
சைனோசோர் எச்வின் நிறுவனத்துக்கு
இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான
ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்
சரவை இதற்கான அனுமதியை வழங்கி
யுள்ளது. (ஒ-இ)

### முள்ளிவாய்க்கால்...

அமைப்பதற்கு நிதி உதவி வழங்க
வேண்டும் என்று பல்கலைக் கழக மாண
வர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்து
ள்ளது.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில்
நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக
மாணவர் ஒன்றியம் நடத்திய செய்தியா
ளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை
விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்
டதாவது-

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில்
அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால்
நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்ட
நிலையில், தூபியை மீண்டும் அமைப்ப
தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்துக்கு நிதி தேவைப்படுவ
தால் இதற்கான நிதி உதவியை அனை
வரும் வழங்க வேண்டும் என்று மாண
வர் ஒன்றியம் வேண்டி நிற்கின்றது.

இந்த நிதியுதவியை பல்கலைக் கழக
மாணவர் ஒன்றியத்தின் வங்கிக் கணக்
குக்கு நேரடியாக வைப்பிலிட முடியும்.
நினைவுத் தூபியை அமைப்பதற்கு
மாணவர் ஒன்றியத்தால் மட்டுமே நிதி
உதவி கோரப்பட்டுள்ளது. வேறு இடங்க
ளில் இதற்கான நிதி சேகரிப்பு எதுவும்
நடக்கவில்லை. அவ்வாறு நடைபெற்
றால் அதற்கு மாணவர் ஒன்றியம்
பொறுப்பல்ல என்று தெரிவிக்கப்பட்டது.'
(எ-20)

### கொரோனா....

பட்டுள்ளது.

மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த 57
வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.
இருதய நோயாளியான இவர் மன்னார்
பொது மருத்துவமனையின் தனிமைப்ப
டுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த
நிலையில் உயிரிழந்திருந்தார். அவ
ருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.
பரிசோதனையில் அவருக்கு தொற்றுள்
ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்
னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்
றால் உயிரிழந்த முதலாவது நபர் இவரா
வார். வடக்கு மாகாணத்தில் கொரோனா
தொற்றால் உயிரிழந்த இரண்டாவது
நபராவார். (எ-இ)

### வடக்கில்...

ணத்தைச் சேர்ந்த 5 பேருக்கும், மன்னா
ரைச் சேர்ந்த இருவருக்குமே தொற்று
உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை பிரிவுக்கு
ட்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்
வருக்குக் கொரோனாத் தொற்று உறுதி
செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கொழும்
பில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிய
நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த
வர்கள் என்று சுகாதாரப் பிரிவினர் தெரி
வித்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்
பட்ட பகுதியில் மற்றுமொருவருக்குத்
தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இவர் அண்மையில் தொற்றுடன் இனங்
காணப்பட்ட மருத்துவபீட மாணவனை
அழைத்துவந்த சாரதி என்று தெரிவிக்கப்
படுகின்றது.

வவுனியாவைச் சேர்ந்த 20 பேருக்கு
நேற்றுக் காலையும், 25 பேருக்கு
நேற்று மாலையும் தொற்று உறுதி செய்
யப்பட்டது. இவர்கள் பட்டாணிச்சூர் பகுதி
யையும், வவுனியா நகரப் பகுதியையும்
சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
மன்னாரைச் சேர்ந்த இருவருக்குக்
கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்
டுள்ளது. '

இவர்கள் மன்னாரில் ஏற்கனவே தொற்
றுடன் இனங்காணப்பட்டவர்களுடன்
தொடர்புகளைப் பேணியவர்கள் என்று
தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா
மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும்
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்
துவபீட ஆய்வுகூடம் ஆகியவற்றில் நேற்று
728 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோ
தனைக்கு உட்படுத்தப்பட்டன. (எ-26)

# ஐ.நா. சபை அமர்வு; இலங்கைக்கு சவால்

## மஹிந்தவின் சகா ரோஹித எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 20

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வு இலங்கைக்குப் பெரும் சவாலாக இருக்கப் போகின்றது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், பிரதமர் மஹிந்தவின் நெருங்கிய சகாக்களில் ஒருவருமான ரோஹித போகெல்லாகம எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான தங்கள் தொடர்புகள் காரணமாகப் பலர், ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசைப் பலவீனப்படுத்துவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளின் ஆதரவைப் பெற முயல்கின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வுக்கு முன்னதாக இதற்காக ஒருங்கிணைந்த முயற்சிகள் இடம்பெறுகின்றன.

பயங்கரவாத மரபு சார்ந்த இராணுவ வழிமுறைகள் மூலம் நிலத்தைப் பெறுவதற்கான தங்கள் முயற்சிகளில் தோல்வியடைந்தவர், நாட்டை இன அடிப்படையில் பிரிப்பதில் இன்னமும் நம்பிக்கை கொண்டவர்களே சர்வதேசத் தலையீட்டைக் கோருகின்றனர்.

ஜெனீவாவில் இந்த முறை புதிய பிரேரணை கொண்டு வரப்படுவது நிச்சயம் என்றால் அரசு அது தொடர்பாக உடனடியாக ஆராய வேண்டும். இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறலை விடவும், மேற்குலக நாடுகளின் உண்மையான நோக்கங்கள் பரந்துபட்டவை. பொறுப்புக் கூறும் விடயத்தைப் பயன்படுத்தி அரசியல் செய்ய வேண்டாம் என்று அவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார். (எ-இ)

# இராணுவப் பயிற்சி வெறும் யோசனை

## அரசு கூறுகின்றது

18 வயதுக்கும் மேற்பட்டோருக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்பது யோசனை மாத்திரமே. அது தொடர்பாக இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கை பிரஜைகளுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் அதில் கேள்வி எழுப்பப்பட்டபோதே கெஹலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இராணுவப்பயிற்சி வழங்கப்படுகின்றது. எடுத்த எடுப்பிலேயே இத்திட்டத்தை இராணுவமயமாக்கல் என குற்றஞ்சாட்டிவிடமுடியாது. இந்தத் திட்டம் யோசனை மாத்திரமே, அது தேவையா, இல்லையா என ஆராய்ந்து பார்ப்பது தவறு கிடையாது. பரீசிலனைக்கு உட்படுத்தும்போது பல விடயங்கள் கருத்திற்கொள்ளப்படும். உலகில் ஐந்து நட்சத்திர நாடுகளில்கூட இராணுவப்பயிற்சி வழங்கப்படுகின்றது. அதனை நிராகரித்தால் தண்டனைகூட வழங்கப்படும். என்றார். (எ-44)

# ரஞ்சனைச் சபைக்கு அழைக்காவிடின் ஜனநாயக வழியில் போராடத் தயார்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 20

'நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சபைக்கு அழைக்கவில்லை என்றால் ஜனநாயக வழிகளிலும் போராட நாம் தயாராகவே இருக்கின்றோம் இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குக் கிடைத்துள்ள சிறைத்தண்ட னையை அடுத்து, அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குத் தற்போது சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எனினும், அவரது நாடாளு மன்ற உறுப்புரிமை 6 மாதங்களுக்கு இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. நாம் இது தொடர்பாக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.


அதாவது அரசமைப்பின் 66, 89, 91, 105ஆவது அரசமைப்புக்கு இணங்க, அவரது நாடாளு மன்ற உறுப்புரிமை இரத்தாகாது எனத் தெளிவாகக் கூறப்பட்டு ள்ளது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், அதற்கு எதிராக அனைத்து ஜனநாயக வழிகளிலும் போராட நாம் தயாராகவே இருக்கின்றோம் என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தநிலையில், அவரை ஏன் நாடாளுமன்றுக்கு இன்று அழைக்கவில்லை எனச் சபாநாயகரிடம் நான் கேட்க விரும்புகின்றேன். அவர் சிறந்த ஓர் அரசியல்வாதி. பொய், ஊழல், இனவாதம் அற்ற ஓர் அரசியல்வாதி. அவர் மக்களின் மனங்களை வென்றவர். இப்படியான ஒருவரை ஏன் இன்று நாடாளுமன்றுக்கு அழைக்கவில்லை என்பதற்குப் பதில் கோருகின்றேன்' என்றார். (ம-22)

# கட்டாய இராணுவப் பயிற்சி எனக்கு எதுவும் தெரியாது!

## சொல்கிறார் இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், ஜன. 20



18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கும் திட்டம் தொடர்பில் இதுவரை எமக்கு அறிவிக்கப்படவில்லை என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கையர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

முப்படையினருக்கு இது தொடர்பாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. கலந்துரையாடப்பட்ட விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டாரா என்பது தொடர்பாகவும் நான் அறிந்திருக்கவில்லை.

இராணுவப் பயிற்சி வழங்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான தீர்மானமெனில் அது தொடர்பில் எதிர்காலத்தில் எமக்கு அறிவிக்கப்படும் என்றார். (ம-ஜ-44)

தேவை
Pharmacy அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் தேவை.
Pharmacy யில் வேலை செய்வதற்கு தகுந்த அனுபவம் உள்ளவர்களும் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
071 415 0995 / 021 435 5114

வேலைவாய்ப்பு
A/L படித்து முடித்த
அனைவருக்கும் வேலைவாய்ப்பு
074 167 5984

வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தல்
அக்ஷதை / நிலா
உணவகங்கள் வழமை போல்
இயங்கத் தொடங்கியுள்ளோம்
என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.
அக்ஷதை நிர்வாகம்

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ராச வீதியில் ராசவீதி சந்திக்கு அருகாமையில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.
தொடர்பு - குரு
077 468 3354
077 805 1655
(தொடர்புகொள்ளவேண்டிய நேரம்
மாலை 2 மணி தொடக்கம் 6 மணிவரை)

பாடசாலை மாணவர்களுக்கான
ஆங்கிலம்
தரம் 6 முதல் 11 வரை பாடசாலை பாடத்திட்டத்தை உள்ளடக்கியது
சிறார்களுக்கு 4 வயது முதல் 11 வரை
Grammar, Reading, Writing, Listening, Speaking
பதிவுகளை ஜனவரி 23ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
DMI COMPUTER EDUCATION
School + Cambridge Course Curriculum
நேரடி வகுப்புகளாகவும்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் Online மூலம் வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளக்கூடிய வசதி
ZOOM ONLINE LEARNING
DMI COMPUTER EDUCATION
No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 0212224403
0777173517

ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.